உ

அகஸ்தியன்.

உலகநன்மைக் கெனவே உலவிவரும்

ஒரு இனிய தமிழ்

மாதாந்தப் பத்திரிகை.

புத்தகம் 1.	1922-௵ டிஸம்பர்௴ துந்துபி ௵ மார்கழி ௴	இலக்கம் 4.

மதங்களும் அவற்றின் ஐக்கியமும்.

II

மனிதவர்க்கத்தின் இக பர நன்மைகளின் பொருட்டு பூலோகத்தில் எறபட்டுள்ள மதங்கள் பல. அவற்றுள் இன்று பிரபல மதங்களாக விளங்குபவை ஹிந்துமதம், மஹமதுமதம், கிருஸ்துமதம், புத்தமதம் என்ற நான்காகும். இவற்றை ஒரு குடும்பத்தின் நன்மைக்காகப் பிறந்துள்ள நான்கு சகோதரர்களுக்கு ஒப்பிடலாம். குடும்பத்தின் நன்மை விருத்தியாவதற்கு நான்கு சகோதரர்களும் தமது உத்தேச அபிப்பிராயத்தில் ஒற்றுமைப்பட்டு வேலைசெய்யவேண்டும். சகோதரர்க்குள் அபிப்பிராய ஒற்றுமை அதிகப்படுந்தோறும் குடும்பத்தின் நல்வாழ்க்கை விருத்தியாகும். அதுபோல, பூலோகத்தின் நன்மைக்காக எற்பட்டுள்ள

இந்த நான்கு பிரபலமதங்களும் தம்முள் சிறிதும் அபிப்பிராய வேற்றுமையின்றி நடந்துகொண்டால் உலகத்திற்கு எல்லாவித நன்மைகளும் எளிதில் சித்திக்கும். முற்கூறிய குடும்பத்திற் பிறந்த நான்கு சகோதரர்களுக்குள் அபிப்பிராய வேற்றுமை தோன்றி அது விபரீதவுணர்ச்சியாகி வலுத்துவிட்டால், அக்குடும்பத்திற்கு அதுவே பேராபத்தாகும். உதாரணமாக இங்கு ஒரு இந்திய அரசனது செயலைக் கூறுகின்றோம். இந்தியாவில் பண்டைக் காலத்திலே ஒரு அரசனிருந்தான். அவன் தனது பிரஜைகளுக்கு யாதொரு தீங்கும்வாராமல் அல்லும்பகலும் அதேகருத்தினனாய்க் கண்ணைக்காக்கின்ற இமைபோலும் இடைவிடாது பாதுகாத்து வந்தான். அரசனது கருத்துக்கிசைந்த மந்திரியொருவர் அவர்க்குத் துணையாகக் கிடைத்தார். மந்திரியின் அரிய குணங்களையும் செயலையும் கண்டு மகிழ்ந்த அரசன் மந்திரியிடத்து மிக்கஅன்புபூண்டிருந்தான். இஃதிவ்வாறாக, மந்திரியினிடத்துப் பொறாமைகொண்ட சிலகீழதிகாரிகள் அத்தகைய மந்திரிபதவிக்குத் தகுதியற்றவராயினும்— தமக்கு அப்பதவி கிடைக்கவேண்டுமென்ற சுயநலத்தால் மந்திரியை அப்பதவியினின்றும் நீக்குவதற்குரிய சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். அதற்கு ஏற்றாற்போல வேற்றரசனொருவன் மேற்படி ராஜ்யத்தின்மீது படையெடுத்துவந்தான். அத்தருணத்தில் மற்றஅதிகாரிகள் யாவரும் தந்திரமாக ஒதுங்கிநின்று குறித்தமந்திரியே சேனைத்தலைமை வகித்து போர்க்களஞ்சென்று போர் புரியுமாறு செய்தனர். மந்திரியின் படையெழுச்சியைக்கண்ட வேற்றரசன் வெருண்டு ஓடிவிட்டான். இந்தவெற்றியை அரசன் அறிந்தால் மந்திரியின்மீது பன்மடங்கு பிரியம் கொள்வானென்று கருதி, அவனது பழைய பகைவர்கள் "மந்திரி போர்க்களத்தில் வெட்டுண்டு இரத்த வெறி பிடித்து இறந்து கோரமான தாடிமீசைகளுடன் பேயுருவங்கொண்டு பற்பல ஊர்களிலும் சஞ்சரிப்பதாயும், பற்பல ஜந்துக்களையும் பிடித்து விழுங்குவதாயும், மனிதர்களைக்கண்டால் விடுவதில்லையென்றும்" பலவாறுசொல்லி, அரசனை நம்புமாறு செய்தனர். மந்திரி திரும்ப நாட்டுக்குள் வாராதவாறும் சூழ்ச்சி செய்தனர். மந்திரி பேய் வடிவங்கொண்டு எங்கும் திரிகின்றானென்ற சொல்லைக் கேட்ட அரசன் மிகப் பயந்து, மந்திரியின் உருவம் தனது நாட்டில் காணக்கூடாதென்று எங்கும் பந்தோபஸ்து செய்தான்! இங்கு

இவ்வாறாக, பழைய மந்திரி 'தான் யுத்தத்தில் வெற்றிபெற்று அரசனைக்காண வரும்பொழுது தனது பழைய பகைவர்கள் தான் நாட்டினில் புகாவண்ணம் தடைசெய்ததை' யுணர்ந்து, இனி தனக்கு ஆன்மார்த்தமான நன்மைகளைத் தேடிக்கொண்டால் போதுமென்று ஆசைகொண்டவனாய், அரணியத்திற்சென்று அங்கு தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்களிடம் உபதேசம் பெற்று, முனிவர்களைப்போலும் சடைமுடி வளர்த்தவனாகிக் கிழங்குகளை புசித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தான். இவ்வாறு சிலநாட் சென்றபின் (மந்திரியின் பேயுருவ சஞ்சாரச்செய்தி அமர்ந்திருந்த காலத்தில்) அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அரசன் அரணியத்தின் பலஇடங்களிலும் வேட்டையாடி வரும்பொழுது ஒருவன் மீசைதாடிவளர்த்து சடைமுடியணிந்தவனாகி மூடியகண்களுடன் சமாதி (தவம்) செய்துகொண்டிருப்பதையும், அவ்வுருவம் தனது உத்தியோகஸ்தர்களால் முன்னர்வர்ணித்துக் கூறப்பட்ட-- பேயுருவங்கொண்ட-- மந்திரியின் உருவம்போலவே இருப்பதையுங் கண்டு அரசன் நடுங்கியவனாய், தனது குதிரை முதலியவற்றுடன் எவ்விதமேனும் பிழைத்து நாட்டுக்குச் செல்லவேண்டுமெனவிரைந்துசென்று அரமனையடைந்து சமாதானப்பெற்று தனது புதியமந்திரி முதலியவர்களை அழைத்து, தான் அன்று கானகத்தில்கண்ட பழைய பேயுருவமந்திரியின் காட்சியையும் அங்கிருந்து தான் ஓடோடியும் வந்ததையும் தெரிவித்து, புதிய மந்திரி முதலியோர் இவ்விபரத்தை முன்னரே தமக்குத் தெரிவித்திருந்ததனால் தனக்கு இத்தகைய நன்மை கிடைத்ததென்றும் கூறி மகிழ்ந்தான். இங்கு நாம் தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் பல. புதியமந்திரி செய்த சூழ்ச்சியின் கருத்தென்ன? அரசனது ஹிருதயமும், பழைய மந்திரியின் ஹிருதயமும் ஒன்றுதலால் பழைய மந்திரியோடு அரசன் சேரவிடாமற் செய்வதுடன், பழையமந்திரி அரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற நற்செயலைக் கண்டால்கூட அரசனுக்கு அது விபரீதமாகவும் பயங்கரமாகவும் தோன்றும்படி செய்துவிடவேண்டுமென்பதே! குறித்த உத்தேசம் நிறைவேறுவதற்காக புதியமந்திரி முதலியோர் கட்டுப்பாடாகச் செய்த சூழ்ச்சியின் பயன் அரசனது ஹிருதயத்தில் அழியா வடிவங்கொண்டு — வேரூன்றி — வாராயிற்று. இங்கு உண்மையில் அரசனது உள்ளத்திலும் மந்திரியின் உள்ளத்திலும்

யாதொரு துரெண்ணங்களுமில்லை. இங்கு வெளியே மந்திரியின் உருவத்தில் காணப்பட்ட பேதவுணர்ச்சி அரசனுக்கு இயற்கையிலே உண்டாவதற்கும் இடமில்லை. ஆனால் இயற்கையிலே மந்திரியின் தற்கால அரணியவாசத்தின் உத்தேசத்தை அரசன் அறிந்தால் அவனுக்கு மந்திரியினிடத்தில் அளவுகடந்த அன்புஉண்டாக இடமுண்டு. அவ்வாறுஉண்டாவதே நியாயமுமாகும். என்றாலும் புதியமந்திரியும் அவரதுதோழர்களும் கட்டுப்பாடாக இந்தக்கதையைக்கிளப்பிவிட்டு அரசனதுஉள்ளம் பேதிக்குமாறு மந்திரியைக் காண்பதற்கு முன்னரே செய்துவிட்டனர்! அதனால் அரசன் மந்திரியின் உட்கருத்தை அறிய இயலாதவனாகி மந்திரியின் தாடி மீசையாகிய வெளியுருவ வேற்றுமைத் தோற்றமொன்றையே கண்டு வெருண்டு ஓடினான். அவ்வாறு பயந்து ஓடியதே நன்மை என்றும் அவசியமென்றுங்கருதித் தனது சகாக்களோடும் பிறகு சந்தோஷித்தான்!

அதுபோல, முற்கூறப்பெற்ற நான்கு மதங்களுடையவும் உட்கருத்து ஒன்றே. அக்கருத்துக்களை உண்மையாக விளக்குகின்ற நான்கு மதங்களிலுமுள்ள ஞானிகளினுடைய அபிப்பிராயப் போக்கும் ஒன்றே. ஆனால், மதங்களின் கீழ்ப்படிகளாயிருக்கின்ற ஆசாரச் சடங்குமுறைகளும், அந்த சடங்குகளை பேதபுத்தி தோன்றும்படி நிர்வகித்து நடத்திவருகின்றசில புரோஹித குருக்களுந்தான் இங்கு மந்திரியின் வீசைதாடிச்சடைகள் போல (உண்மையறியாத பலர்க்கும்) தோன்றி பேதஉணர்ச்சிக்குக் காரணமாக விளங்குகின்றனர். பழைய மந்திரியின் தற்கால உண்மை நிலையையும் சிறந்த ஒழுக்கங்களையுமறிந்தவர்கள் அவரைப்புகழ்வதற்கு இடமிருப்பதுபோல, இந்த மதங்களின் உட்கருத்தை ஆராய்ந்து உண்மைப்பொருளை யுணர்ந்தவர்கள் வெளியுருவங்களில்-- ஆசாரச் சடங்குகளில்-- காண்கின்ற வேற்றுமைகளைச் சிறிதும் பொருட்படுத்த மாட்டார்கள். பழைய மந்திரியின் உண்மை நிலையையுணர்ந்தால் அரசன் அவனோடுசேர்ந்து ஒத்துவாழ விருப்பங்கொள்வான் என்று கருதி, புதியமந்திரிகூட்டத்தார் அவரைப்பற்றி முன்னரே பலவகை அபவாதங்களையும் விபரீதச் செயல்களையும் உண்டாக்கி விட்டதுபோல, குறித்த நான்கு மதங்களுடையவும் உண்மைக்கருத்தை யுணர்ந்துகொண்டால் ஜனங்கள் அந்தந்த மதங்களோடு ஐக்கியப்பட்டு வாழ்வார்களென்றுகருதிய சில

சுயநல புரோஹித குருக்கள், முறையே அந்த மதங்களைப்பற்றிக் கால அளவிலே விபரீத எண்ணங்களையும் அவதூறு மொழிகளையும் சிருஷ்டித்து வளர்த்து விட்டனர். குறித்த செயல்களை அவர்கள் கையாண்டு வந்திருக்கின்றார்களென்பதற்கு ஒவ்வொரு நூல்களிலிருந்தும் (பிற்காலத்தில் எழுதிச்சேர்க்கப்பட்ட) அவ் ஆதார மொழிகள் வாராளமாகக் காணலாம். ஆதலால் குறித்த நான்குமதங்களும் ஒரேகுடும்பத்தின் சுகசெல்வ நலவாழ்க்கையின் அபிவிருத்திக்காகப்பிறந்த நான்கு சகோதரர்கள்போல் கருதி, மனித வர்க்கத்தின் மேலானவாழ்க்கை நலம்பெற்று மகிழுமாறு செய்வதே மதங்களின் உத்தேசமும் ஐக்கியமுமாகுமென்பது நன்குவிளங்கும்.

விசேஷ வர்த்தமானக் குறிப்பு.

ரப்பர்ப் பத்திரிகை.

ரப்பர் பாலைக்கொண்டு ஏதேனும் நிரந்தரமான உபயோகத்தை உண்டுபண்ணக்கூடுமா என்று சிலகாலமாய் அறிவாளிகள் ஆலோசித்து வந்தனர். இப்பொழுது அது பலித்திருப்பதாகத் தெரிகின்றது. ரப்பர்பாலைக்கொண்டு செய்யப்பட்ட ஒரு காயிதத்தில் 'இன்வெஸ்டர்ஸ் கிராணிகிள்' என்ற பத்திரிகை அச்சிடப்படுகிறது. காகித உற்பத்திக்கு ரப்பர் மிக்க உபயோமாயிருக்குமென அது கூறுவதனால், இனி ரப்பர்த்தோட்டங்கள் நல்லநிலைமைக்கு வர இடமுண்டு. அமெரிக்கர்கள் இப்பொழுது பலஇடங்களிலிருந்தும் ரப்பர்வாங்கி வருகின்றனராம். அவ்விடத்தில் "ரப்பரினால் காயித உற்பத்தி செய்வதெற்கென்றே" ஒருகம்பெனி ஏற்பட்டிருக்கின்றதாம். 12000 பவுன் அதன் மூலதனமென்றும் ஒரு வர்த்தமானி தெரிவிக்கின்றது.

சென்னை மாகாணத்தின் ஜனத்தோகை.

சென்ற 1921 -ம் வருஷத்திய ஜனகணிதப்படி சென்னை மாகாணத்தில் 42794155 ஜனங்கள் வசிக்கின்றனர்.

இலங்கையிற் கண்ணாடி.

ஜப்பானிலுள்ள ஒரு கம்பெனியார் இலங்கையிலுள்ள ஹெனறற் கோடை என்னும் இடத்தில் கண்ணாடி யுற்பத்தி சாலை யொன்றை ஸ்தாபிக்க முன்வந்துள்ளனர். இதுபோல திருவனந்தபுரத்துக் கடற்கரை மணலுக்கும் ஒரு நல்ல யோகம் வரவேண்டும்.

கல்லாய்ச் சமைந்த நண்டு.

உயிர் போகும் தருணத்திலுள்ள நோயாளிகளுக்கு இது உயிர்ப் பிச்சையளிக்கும் சிறந்த பொருள். இதனால் பலரும் உயிர்த்தெழாமலில்லை. ஆனால், இது உபயோகித்த பின்னரும் பிழைக்கவில்லை என்றால் அவர்களின் ஜீவிதம் அத்துடன் முடிந்ததாகக் கருதவேண்டும். இதன் குறிப்பு கார்த்திகை மாத இலக்கத்தில் காணலாம்.

ஜப்பானிலும் எண்பது லக்ஷம்.

'தீண்டத்தகாதவர்கள்' என்று ஒதுக்கி வைக்கப்பட்ட ஜனங்கள் இந்தியாவில் மாத்திரமே கோடிக்கணக்காக இருக்கின்றனரெனச் சிலர் கருதி வந்தனர். இப்பொழுது ஜப்பானிலும் அதுபோலவே பாவிக்கப் படுகின்ற ஒரு வகை ஜாதியார் 80 லக்ஷம் பேரிருக்கின்றனரென்றும் அவர்கள் முன்னேற்ற மடைவதற்கான கிளர்ச்சிகள் நடைபெற்றுவருகின்றனவென்றும் ஒரு சகோதரப் பத்திரிகை அறிவிக்கின்றது. அத்தகையபாவனையோடு நடத்திவரப்பெற்ற நீக்ரோவர்களின் தொல்லை இன்னும் நீங்கிவிடவில்லை என்றும் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. மனிதனை மனிதன் தாழ்த்தி வாழவேண்டுமென்ற எண்ணம் மனித உலகத்தை விட்டு நீங்கும்வரை மனித ஜாதியில் க்ஷேமப் பயிரின் செழுமை காண்பதரிது!

ஆகாயத்தில் 17 ஆயிரம் அடி.

ஆகாய விமானத்தின் மூலமாக 17000 அடிவரையில் பறக்கலாயாம். அதன் மேல் பறத்தல் சாத்தியமில்லையாம்.

உணவும் குணமும்.

உண்ணும் உணவுக்குத் தக்கபடிஉள்ளத்தின் விளக்கம் ஏற்படுகின்றது. அனுபவத்திற் காணலாம்.

உரோமம் நரைப்பதேன்?

மிருதியான சரீர உழைப்பினலும், கோபத்தாலும், துக்கத்தாலுமுண்டாகின்ற சூடும் பித்தமும் சேர்ந்து தலையில் ஏறி விருத்தியாகின்ற கபந்தான் உரோமம் நரைப்பதற்குக் காரணமென்று 'யோகக்ஷேமம்' பத்திரிகை கூறுகின்றது.

குடியை நிறுத்தும்.

நீண்டகாலமாய் மதுபானம் செய்து பழகியவர்களுக்கு அதினின்றும் விடுதலையடைய ஒரு சுலபமான வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. தினந்தோறும் 4 எலுமிச்சம்பழம் வீதம் உபயோகித்து வந்தால் பிறகு மதுவின் ஞாபகமே வராதாம். மது விலக்கு பிரசாரஞ்செய்வோர் இந்த முறையை அனுஷ்டிக்கச் செய்யலாம்.

வறுமையை வெளியிடுகின்றது.

இந்தியாவின் வருமானத்தையும் இந்தியர்களின் தொகையையும் சேர்த்துக் கணக்கிட்டால் ஒரு இந்தியனுக்கு வருஷ வருமானம் 1 க்கு இரண்டு ரூபாய் வீதம் சராசரி கணக்காகிறதாம். இதுபோல் கணக்கிட்டால் ஒரு அமேரிக்கனுக்கு வருஷ வருமானம் 585 ரூபாயும் ஆஸ்திரேலியனுக்கு 600 ரூபாயும் ஸ்பானியனுக்கு 900 ரூபாயும் ஆகின்றதாம்.

துன்பத்திற்காகப் பிறந்தவர்கள்.

சென்னை ராஜதானியில் மாத்திரம் 15753 குஷ்டரோகிகள் இருக்கின்றனராம். இவர்களின் துன்பத்திற்கு ஒரெல்லையில்லை. மனித ஜன்மத்தையே மாய்த்து வருகின்ற இந்தரோகத்தை மனிதவர்க்கத்தினின்றும் நீக்குவதற்கு வைத்தியர்கள் எல்லோரும் முயற்சிக்கவேண்டும்.

வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

சந்திரனிடத்தினின்றும் நமக்கு கிடைக்கின்ற வெளிச்சத்தைப் பார்க்கினும் 8,00000 பங்கு வெளிச்சம் நமக்கு சூரியனிடமிருந்தும் கிடைக்கின்றதாம். இந்த சூரியவெளிச்சத்தின் உதவியினால் பற்பல தொழில்களையும் செழிக்கச்செய்யலாமென்று மேதாவிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

மூடுபனி நீங்கும்.

மூடுபனியைத் தடுப்பதற்கு இப்பொழுது ஒரு அமெரிக்கர் பிரயத்தினஞ்செய்து வருகின்றார். அவர் தெரிவிக்கின்றபடி சிலஇடங்களில் வெற்றி பெற்றதாகவும் ஒரு அமெரிக்கப் பத்திரிகை எழுதுகின்றது.

அறிவுமுதிரும் வயது.

ஒரு அமெரிக்க வைத்தியர் பலவருஷங்களாக 1700 பாலிய வகுப்புப் பிள்ளைகளைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் 3வது வயதுமுதல் இயற்கையறிவு ஆரம்பித்து, ஸ்திரீகளுக்கு 22 வயதிலும், புருஷர்களுக்கு 24 வயதிலும் பூர்த்தியடைவதாக அவர் கூறுகின்றார்.

36000 நாற்காலிகள்.

லண்டனிலுள்ள பிரதான கிறிஸ்தவ தேவாலயத்தில் ஏககாலத்திலே 36000 பேர் உட்காரக்கூடிய நாற்காலிகள் அமைக்கப்படுமாம்.

ஒருவனுக்கு 23 மனைவி.

மதுரையில் சாவ்கார் என்று பிரசித்திபெற்ற ஒரு புராதன குடும்பத்தைச்சேர்ந்த காதர்பாஷா சாயபு என்பவர் இறந்துபோகும்பொழுது அவர்வயது 73. அவர் 23 மனைவிகளை விவாகஞ்செய்துகொண்டிருந்தாராயினும் குரானிற்கூறியபடி 4 மனைவிகளுக்குமேல் ஒருகாலத்தில் அவ

ருக்கு இருந்ததில்லையென்று சொல்லப்படுகின்றது. அவருக்கு 23 மனைவிகளிடமும் 93 குழந்தைகள் பிறந்தனவாம்.

*   *   *   *   *

விவகாரப் பைத்தியம்.

சென்னை ராஜதானியில் விவகாரப்பைத்தியர்கள் மிகுதியாக வசிப்பது தஞ்சை, மலபார் என்ற இரண்டு ஜில்லாக்களிலுந்தானும். இதுபோல் சமாதானப் பிரியர்கள் வசிக்கும் நாடு இன்னும் குறிப்புக்கு வரவில்லை.

*   *   *   *   *

கருமையை வெண்மையாக்குதல்.

'ஓ. எப். பிப்ருஸோ' என்பவர் மனிதனுடைய சரீரத்தின் கருமை நிறத்தை வெண்மை நிறமாக மாற்றும் வழியைக் கண்டுபிடித்திருக்கின்றார். அவர் ஒருவனுடைய இடது கையினின்றும் சிறிது இரத்தத்தை எடுத்து தனது புதிய யந்திரத்தினுள் செலுத்தி அது சுத்தமாக்கப்பட்டவுடன் மீண்டும் அதே கையில் செலுத்திவிடுகின்றார். பிறகு கரிய தோல் வெண்மையாக மாறிவிடுகின்றது. இனி, கரியநிறமுள்ளோர் கவலைப்படவேண்டாம் என மஞ்சுபாஷிணி கூறுகின்றாள்.

*   *   *   *   *

நமது ஏஜண்டு விளம்பரம்.

ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் இவைகளில் நமது ஔஷதாலயத்தின் கிளையாக இரண்டு ஷாப்புகள் திறக்கப்பெற்றுள்ளன. ஸ்ரீவில்லிப்புத்தூர் நீதிநூல் வேதாகமப் பிரம்ம வித்தியா சாலையின் ஸ்தாபகரும் தலைவருமாகிய ஸ்ரீமான் வைத்திலிங்கம் பிள்ளையவர்கள் ஷெ கிளைச்சாலைகளின் ஏஜண்டாக நியமிக்கப்பெற்றிருக்கிறார். ஆதலால் அங்குள்ளோர் அவரிடம் நமது ஔஷதாலயத்திலுள்ள எல்லா ஔஷதங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்:—

சதானந்த ஔஷதசாலை,

ஸதானந்தபுரம்,

கொட்டாரக்கரை. S. I. R.

குரு லிங்க சங்கமம்.

[முன்தொடர்ச்சி]

இனி பற்பலசாதாரணகுருக்களும் ஏற்பட்டிருக்கின்றனர். உதாரணமாக: கிறிஸ்துமதத்தில் உரோமன்காதலிக் பாதிரிகளும் ப்ரோடஸ்டாண்டு பாதிரிகளும் ஆதிவார சித்தாந்திகளாகிய ஞாயிற்றுக்கிழமைக் காரர்களும், அந்தியவார சித்தாந்திகளாகிய சனிக்கிழமைக் காரர்களும் இரக்ஷணீய சேனை சித்தாந்தக் காரர்ளாகிய மோக்ஷமூலர்களும் இருக்கின்றனர். புத்தமதத்தில் பொங்கிகளும், மகமதிய மதத்தில் லப்பை முதலியவர்களும் இருக்கின்றனர். தியாபியில் (பிரம்மஞான சங்கத்தில்) இன்னர் சர்க்கிள் சித்தாந்திகளும், ஔடர் ஸர்க்கிள் சித்தாந்திகளும், தனித்தனியே இருக்கின்றனர். இவ்விதமான சித்தாந்திகளின் அபிப்பிராய வேற்றுமை எண்ணங்கள் பெருகிவருந்தோறும் உலகத்தில் சிறியசிறிய மதக்கொள்கைகள் அதிகமாகப்பரவுவதோடு பொதுவே மனிதவர்க்கத்தின் விசால அறிவு குன்றிப்போகவும், அதனால் உலகத்தில் புதியபுதிய அனர்த்தங்கள் விருத்தியாகவும் காரணமாகின்றது. குறித்த காரணங்களை யோசிக்கும் பொழுது, சாதாரணகுருக்களின் தேவையைப்பார்க்கினும்ஒருஉலககுருவின்தேவையே சதாகாலமும் உலகத்திற்குத் தேவையாக இருந்து கொண்டிருக்கின்றதென்பதுநன்குவிளங்கும்.

முற்காலத்திய குருக்களின் வேலையும், தற்காலத்திய குருக்கள் செய்துவரும் வேலையும்.

குருக்கள் என்பது இங்குஆசாரியர்களை மட்டும்குறிக்கின்றசொல்லாகும். (கோயில் பூஜைசெய்வோரையும் புரோகிதர்களையுமன்று) பூர்வகாலத்தில் ஹிந்துமத குருக்கள் வேதாகமங்களை உபதேசித்தும், யாகம் முதலிய கர்மங்களை நடத்தும்படிசெய்தும், ஆலயப்பிரதிஷ்டைகள் புரிந்தும், மதசம்பந்தமாக அக்காலத்திய ஜனங்களிடத்திற்காணப்பட்ட தேவைகளை அக்காலத்திற் கேற்றவாறு நிறைவேற்றியும் வந்தனர். இது வேதகாலத்திலும் அதற்கடுத்தகாலம்வரைக்கும் முறையே அனுஷ்டானத்தில் நடைபெற்றுவந்தது. ஆனால், தற்காலத்தியகுருக்களோ, தற்கால இயல்புகளுக்கேற்ப அவர்கள் நிறைவேற்றிவரவேண்டிய கடமைகளை நிறைவேற்ற முடியாமலிருக்கின்றனர்! ஹிந்துஜன சமுதாயத்தின் தேவைகள் அக்காலத்திலிருந்தும் சிறிதுசிறிதாக விருத்தியடைந்து வருந்தோறும் அவற்றை நிறைவேற்றி வரவேண்டிய பொறுப்பு வாய்ந்தனவாகிய குருக்களின் கடமைகளும் உரியவாறு விருத்தியடைந்து வரவில்லை. இவ்விதம் ஜனங்களின் தேவைகள் காலபக்குவத்தினால் வரவர விசாலமாகி தக்ஷிண துருவத்திற்கு வந்துசேரவும், குருக்களின் நிலைமை உத்தரத்துருவத்தில் (முன் இருந்தவாறு) ஒரேநிலையில் இருக்கவும் காரணமாகவே,

ஹிந்துஜன சமுதாயம் பலவகைத் துன்பங்கள் அனுபவிப்பதற்கு இடங் கிடைத்தது.

ஹிந்துமத குருக்களுக்கும் இதரமத குருக்களுக்குமுள்ள வேற்றுமைகள்.

ஹிந்துமதத்தின் குருக்கள் கல்விசெல்வங்களினால் உயர்ந்த ஜாதியார்களையும், சொந்த வகுப்பு ஜனங்களையும் மட்டுமே தமது பார்வையில் வைத்து கவனித்துக் கொண்டும், மற்றுள்ள உள்வகுப்பு ஜனங்களையும், சொற்ப கொள்கை வேற்றுமையுடைய இதரஜனங்களையும் நெருங்கவிடாமலும், அவர்கள் புறமதங்களிற் சென்று சேர்ந்து கொள்ளும்படியான நிர்ப்பந்தச் சடங்குகளைத் தாராளமாக ஏற்படுத்தியும், ஹிந்துமதத்திலுள்ள சாசுவதமான தர்மக்கொள்கைகளைப் பூலோகத்திற் பரவச்செய்யாமலும், குறித்த நிர்ப்பந்தங்களைச் சகியாமல் புறமதங்களில் சேர்ந்தோர் மீண்டும் ஹிந்துமதத்தில் வந்து சேராமலிருப்பதற்கான போதிய பந்தோபஸ்துகள் முன் ஏற்பாடுகள் செய்தும், இதரமதத்தினர் ஹிந்துமதத்திற் சேர்ந்து ஆத்மார்த்தமான நன்மையை அடைய வேண்டுமென ஆவலோடு வந்தால் அவர்கள் ஆத்ம ஞானமடைய அதிகார முடையவர்களல்லரென்று தள்ளியும், தாம் மட்டும் முன்னோர்களால் சேர்த்து வைக்கப்பட்ட சொத்துக்களை இஷ்டம்போல் அனுபவித்துக் கொள்வதில் பூரண அதிகாரமுடையவர்களென்று நிரூபித்தும் அதேமதத்தினராகிய மற்ற ஜனங்கள் எத்தகைய தீங்கை யனுபவித்தாலும் அம்மட்டிலும் தங்களுக்கு ஒரு திருப்திகரமான பாக்யம் கிடைத்ததென்று ஒதுங்கியும், தாழ்ந்த ஜாதியார் என்று ஒதுக்கப்பட்டிருக்கும் ஜனங்கள் தெய்வத்தினால் தாழ்த்தப்பட்டவர்களென்றும், அதுவிதிப்படியமைந்த செயலென்றும் சிலகற்பனை ஆதாரங்களை விரிவான வியாக்கியானங்களோடு வெளியிட்டுக் கொண்டும், கழுதை குதிரையாகாதென்னும் விஷம திருஷ்டாந்தத்தை விளங்கா முறையில் குயுக்திவாதங்களோடு விரிவாய் எடுத்து விளக்கியும் வருகின்றார்கள்!

கிறிஸ்து முதலிய இதரமத குருக்களோவென்றால், மனிதர்களின் மனத்திற் பதியத்தக்க அரிய தர்மகுணச் செயல்களை அனுஷ்டித்துக் காட்டிவருகின்றனர். அவர்கள் கடவுள் 'மனிதர்களுக்கெனவே சம்மதித்துக் கொடுத்திருக்கின்ற' சுதந்திரங்களை விரிவாக எடுத்துப் போதிக்கின்றனர். அவற்றை அடைவதற்குத் தடையாய் நிற்கின்ற இடையூறுகளை அறவே நீக்குவதற்குப் போதிய உதவிகளைச் செய்து வருகின்றனர். ஹிந்துக்களால் எல்லா விதத்திலும் அநாதரவு செய்து தள்ளப்படுகின்ற ஜனங்களை ஆதரவோடு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு கல்வி, செல்வம், சுகாதாரம், தொழில், கடவுள் வழிபாடு, ஆலயப்பிரவேசம், ஜாதீய சுதந்தரம் உத்தியோக முதலிய அதிகார சக்திகளைக் கொடுத்துக் கைதூக்கி விடுகின்றனர். அவர்கள் இவ்விதம் செய்து வருவதனால் ஹிந்துக்களில் 'உயர்ந்த ஜாதியார்' என்று அபிமானித்துக் கொண்டிருக்கின்ற ஜனங்க

ளும், முன்னர் அவர்களாலேயே ஒதுக்கித் தள்ளப்பட்ட இந்த ஜனங்களை வெகுமான ஆதரவுகளோடு வரவேற்றுக் காத்திருக்கும்படியான நிலைமைக்கு இவர்கள் பாதிரிகளால் சிருஷ்டித்து விடப்படுகின்றனர்! (இதுவும் மனித சிருஷ்டிதான்! இந்த சிருஷ்டிசக்தி ஹிந்துக்களுக்கு இருக்கக் கூடாதா? தெய்வம் கோபிக்குமா?) ஹிந்துக்களின் தெய்வத்தால் தாழ்த்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற தாழ்ந்த ஜாதிகளை, கிறிஸ்து மதத்திலுள்ள பாதிரிகளுக்கு (அவர்களை) மேலான முறையில் உயர்த்தி விடும்படிக்கான எல்லாவிதச் சக்திகளும்— வல்லமையும்— பிரத்தியக்ஷமாகக் கிடைத்திருப்பதை நினைக்கும்பொழுது, ஹிந்துக்களிடத்திலுள்ள எழுத கோடி (70000000) மகா மந்திரங்களால் சுத்தஞ் செய்தாலும் தாழ்த்தப்பட்ட புலையர், பறையரின் ஆத்மாக்கள் சுத்தியாகாதாம்! ஒருகூடை மண் திரும்வலை ஒருநாள் முழுதும் சுத்தஞ்செய்தாலும் நன்றாகச் சுத்தம்வந்ததோ அல்லவோ என்று சந்தேகப்படுகின்ற வைதிகர்களின் கங்கை தீர்த்த மந்திரப் புரோக்ஷணங்களாலும் தாழ்ந்த ஜாதியினர் சுத்தியாக முடியாது! ஆனால், இங்கு சொல்லிய சௌசாசார வேத மந்திர நியமச் சடங்குகள் சிறிதுமில்லாத ஒருபாதிரியின் கையினால் எந்தக்கலங்கல்நீர் எந்தத்தாழ்ந்த ஜாதியான் மீது தெளிக்கப்பட்டாலும் அவன் குடும்பத்தோடு அக்கணமே ஞானஸ்நானப் பிரபாவம் பெற்று பரிசுத்த ஆத்மாவாகி ஞானியாகவும் கௌரவிக்கப்படுகின்றான்! இதன் காரணமென்ன? இந்த ரகசியத்தைத்தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ஒருபாதிரியினுடைய இருதயத்தில் அவரது மதமும் அதன் சடங்குகளும் பரிசுத்தமானவை என்ற மதிப்பும் விசுவாசமும் வேரூன்றி இருக்கின்றன. அவ்விதமான மதிப்பும் விசுவாசமும் நிறைந்த ஒருகூட்டத்தில் நமது 'தாழ்த்தப்பட்ட ஜாதியான்' சேர்ந்தவுடன் அவனுக்கும் அத்தகைய மனச் சக்தியின் எழுச்சி விருத்தியாகி, அதே பாவனையினால் அவனும் உயர்ந்த ஆத்மாவாகின்றான். 'யத்பாவம் தத்பவதி' என்ற ஹிந்துமதக்கொள்கையே அங்கும் நிற்கிறது. பாதிரிக்கு, தான் "மற்றொரு ஆத்மாவைப் பரிசுத்தம் செய்ததாயும் உயர்த்திவிட்டதாயும்" ஒரு சந்தோஷ திருப்தி உண்டாகின்றது. அதிற் சேர்ந்தவனுக்கோ, தான் பரிசுத்தனாகி உயர்ந்து வந்ததாகவும் சந்தோஷதிருப்திகள் உண்டாகின்றன. இதுபோல, ஹிந்துக்களின் குருக்களுக்கோ, ஹிந்து மதத்திலும் ஹிந்துமத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட மந்திரங்களிலும் அவற்றின் சம்பந்தமான சடங்குகளிலும் அவை பரிசுத்தமானவை என்ற மதிப்பு விசுவாச எண்ணங்கள் இருதயத்தில் இல்லை.! (இருக்கவேண்டிய இடத்திலில்லை!) அவை இல்லாமையால் தாழ்ந்த (அல்லது அசுத்தமிருப்பதாகக்கருதி ஒதுக்கி தாழ்த்தப்பட்ட) ஜாதியினர்களைப் பரிசுத்தப்படுத்தி உயர்த்திவிடுவதற்கு ஹிந்து குருக்களால் முடியவில்லை. குறித்த விசுவாசநம்பிக்கைகள் ஹிந்துமதத்திலுள்ளமேல்ஜாதியினர்க்கும் (குருக்களுக்கும்) கீழ்ஜாதியினராகக்கருதப்படுகின்ற தாழ்ந்தஜாதியினர்க்கும் இல்லாமையால், முறையே இவ்விருவருக்கும் தங்களுக்குஅத்தகைய

சக்தியோ, மதிப்போ, கௌரவமோ இருப்பதாக தெரியவில்லை. இவர்களுக்கே அந்தமதிப்பும் விசுவாசமும் தங்களுக்குள் இல்லாமையால், பாதிரிகளுக்கும் ஹிந்துக்களிடத்தில் மதிப்புக்குறைவு இருந்து கொண்டிருக்கநியாயமிருக்கிறது. அக்காரணத்தினால் ஹிந்துக்களை அஞ்ஞானிகளென்று பாதிரிகள் கூப்பிடுகின்றனர். இதில் அபிப்பிராய பேதமென்ன? பாதிரிகளுக்குத்தங்களுடைய மதத்தில் மதிப்பும்விசுவாசமும் ஏற்படுகின்றமையால்நமக்கும் அவர்களிடத்தில் மதிப்பும் விசுவாசமும் ஏற்படும்படி நேர்ந்துவிடுகின்றது. இந்தநியாயத்தை நாம் தெரிந்துகொண்டாவது நம்முடைய நிலைமையை ஆலோசிக்கக்கூடாதா? உதாரணமாக:— பாதிரிகளால் பரிசுத்தமாகச்செய்து (ஞானியாகச்செய்து) உயர்த்திவிடப்பட்ட-முன்னர் ஹிந்துவாயிருந்த பறையர்புலையர்களை அவர்கள் முன்னிருந்தநிலைமையில் நாம் கவனியாமல், பாதிரிகள் புதுப்பெயரிட்டு, உடைகொடுத்து, புதியபாவனையூட்டி ஏற்றிவைத்த நிலைமையினின்றும் நாம் அவர்களைச்சிறிதும் குறைக்காமல்— அதே நிலைமையில் நாம் ஏற்று— ஆதரித்து, வெகுமானத்துடன் இருந்துவருவதே இதற்குப்போதுமான சாக்ஷியாகும். இவைதாம் ஹிந்துமத குருக்களுக்கும் இதரமத குருக்களுக்குமுள்ள வேற்றுமைகள்.

புநர்ஜன்மம்— மறுபிறப்பு.

[முன்தொடர்ச்சி]

—[*]—

ஆதலால், அந்த விபரத்தை இப்பொழுது பகிரங்கமாகக் கூறவேண்டும். [சிறிதுநேரம் பொறுத்திருத்தல்] நாம் இவ்வளவுநேரம் பொறுத்திருந்தும் யாரும் கூறவில்லை. இப்பொழுது அந்தசங்கதி ஒருவருக்கும் தெரியாதென்று தீர்மானமாயிற்று. ஆதலால், நாம் உங்களிடத்தில் கேட்கவேண்டியது ஒன்றுண்டு. உங்களில் யாராவது சென்றமாதம் 23உ மத்தியானம் சாப்பிட்டதுண்டா? இல்லையா? அவ்விதம் சாப்பிட்டிருந்தால் அந்த சாப்பாட்டுடன் கூட்டு உணவுப் பொருள்களும் சேர்ந்திருக்கக் கூடும். அந்தக் கூட்டுத் தின்பண்டங்களை (கறி, கூட்டு, துவயல், ஊறுசாய் முதலியவைகளை) உட்கொண்டவர்க்கு அவை ஒவ்வொன்றினுடையவும் எண்ணிக்கையும் வகையும் சுவை வித்தியாசங்களும் நன்றாகத் தெரிந்திருக்கக்கூடும். இப்பொழுது தெரியாதென்று சொல்வதனால் உங்களுடைய சாப்பாடு அன்றையதினம் நடந்திருக்காதென்று நாம் நம்பவேண்டுமா? நடந்ததாக நம்பவேண்டுமானால்,

அந்த சாப்பாட்டை உட்கொண்டவர்கள் இந்த சபையிலுள்ளவர்கள்தானல்லவோ? உண்மையைச் சொல்லவேண்டியது உரியவர்களின் கடமை. சொல்லுங்கள்! சொல்லுங்கள்! நன்றாகச் சொல்லுங்கள்! யாரேனும் ஒருவராவது சொல்லுங்கள். (இப்பொழுதும் பதிலில்லை!) யாரும் சொல்லக்காணோம்! இதனால்தான் தெரியாத காரியத்தை இல்லை என்று சொல்லக் கூடாதென முன்னரே தெரிவித்தோம்.

இவ்விதமாகவே, நமது முன்பிறவிகளையும் "நமக்கு அவை தெரியாத காரணத்தால் இல்லை" என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். இந்த ஜன்மத்திலேயே ஒருவனது சிறிய வயதுமுதல், வயோதிக நிலைவரைக்கும் ஒவ்வொரு தினங்களிலும் அவன்செய்த செயல்கள்கூட அவனுக்குப் பூராவும் சொல்ல முடியவில்லை. அவன் இளமையில் அவனுடைய சிநேகிதனோடு விளையாடியும், பள்ளிக்கூடங்களிற் சென்று கல்வி கற்றும் அக்காலங்களில் அவன் தனது நண்பர்களோடு சண்டைசச் சரவுகள் செய்தும் விநோத மகிழ்ச்சிகள் புரிந்தும் தினந்தவறாது, சிஞன பானங்கள் செய்தும் வந்திருக்கின்றான். அவை எவ்வாறு எவ்வாறு நடைபெற்றுவந்தன என்றும் இப்பொழுது அவனுக்கு நன்றாகத்தெரியாது. அக்காலம் நீங்கி அவன் காளைப் பருவம் பெற்று குடும்ப வாழ்க்கையில் தலையிட்டுப் பொருள் சப்பாத்தியம் செய்தும், மனைவி மக்களைப் பாதுகாக்கவேண்டிச் செய்த பலவாறான வேலைமுறைகளும், அவைகளிலிருந்து அவன் அனுபவித்த கஷ்டநஷ்டங்களும், அவைநீங்கி வயோதிகப் பருவம்பெற்ற இக்காலத்தில் ஒவ்வொரு நாளும் அனுபவித்துவந்த அனுபவங்களும் ஒவ்வொன்றாக எடுத்துச் சிறிதும் விடாமல் சொல்ல முடிவதில்லை. அவை ஒருவராலும் சொல்ல முடியாது; சொல்லத் தெரியாது. ஆனால், 'தெரியாது' என்ற ஒரேகாரணத்தால் ஒருவனது "பாலியம், யௌவனம், வயோதிகம்" என்னும் பருவங்களில் ஒன்றுமே நடந்திருக்கமாட்டா என்று தீர்மானிப்பதற்கில்லை.

இந்த ஜன்மத்திலே நடந்த ஒவ்வொரு சப்பவங்களையும் காரியங்களையும் எடுத்துச்சொல்லக்கூடச் சக்தியற்றவர்களாயிருக்கின்ற ஜனங்களுக்கு முன் ஜன்மங்களை எவ்வாறு சொல்லமுடியும்?

இனி, முன் ஜென்மத்தையறியும் உபாய வழியைத் தெரிவிக்கிறோம்.

ஜென்மாந்தரத்தை யறிதல்.

ஒருவிஷபத்தைத் தெரியாது என்று சொன்னதனால் மட்டும் ஒருவருக்கும் ஒருவிஷயமும் தெரியப் போவதில்லை. ஆனால் "தெரியாமற்போன காரணங்களை" நன்றாக உணரவேண்டும். உணரும் வழிகள்: ஒரு மனிதனுக்கு இரண்டுவகைக் கண்களுண்டு. ஒன்று வெளிக் கண்களும், மற்றொன்று உட்கண்களுமாகும். உட்கண்கள் என்பது ஞானக் கண்களாகும். அந்த ஞானக் கண்களிலும் ஒன்று வெளிக்கண்ணும் மற்றொன்று உட்கண்ணுமாக இருந்துகொண்டிருக்கின்றது. இந்த உட்கண்கள் இரண்டுக்கும் வெளிக்கண்கள் ஸ்தூலமாயிருப்பதுபோல, உட்கண்ணுகளிலும் ஒன்று ஸ்தூலமாயும் மற்றொன்று சூக்ஷுமமாயு மிருக்கின்றது. சரீரத்தின் வெளிக் கண்களுக்குப் புலப்படாத பொருள்கள் சரீரத்தினுள்ளேயுள்ள ஸ்தூலக் கண்ணுக்குப் புலப்படும். அதற்கும் புலப்படாத பொருள்கள்— விஷயங்கள்— சூக்ஷுமக் கண்ணுக்குப் புலப்படும். சரீரத்திற்கு உள்ளேயுள்ள ஸ்தூலக் கண்ணானது வெளிக்கண்களுக்கு அந்தரங்க உதவியா யிருந்த போதிலும் 'அதற்கும் உள்ளேயுள்ள நுட்பமான— சூக்ஷுமக் கண்ணுக்கு' வெளிக் கருவியாக (பகிரங்க உதவியாக) த்தானிருக்கின்றது. உட்கண்ணுகளிரண்டையும் பிரத்தியக்ஷம் என்றும், ஸ்மரணை என்றும் இரண்டு ஞானக்கண்களாக எடுத்துக் கொள்ளலாம். இவ்விரண்டு கண்களும் ஒரேகாலத்தில் ஒருமனிதனுக்கு ஒரே விதத்தில் திடமாக இருப்பது சாத்தியமான விஷயமல்ல. எவ்விதமென்றால், ஒன்றின் பார்வை மேலிலும் மற்றொன்றின் பார்வை கீழிலுமிருக்கும். பாம்புக்குக் கேட்கும்பொழுது காணுமறிவில்லை; காணும்பொழுது கேட்குமறிவில்லை. அதுபோல, பிரத்தியக்ஷ ஞானமிருக்கும்பொழுது (அதாவது வெளிப் பொருள்களைக் காணும்பொழுது) ஸ்மரணை ஞானமிருப்பதில்லை. அவ்வாறே ஒரு விஷயத்தைப் பற்றிய ஸ்மரணை (நினைவு) ஞானமிருக்கும் பொழுது பிரத்தியக்ஷ ஞானமிருப்பதில்லை. இவ்விரண்டு விஷயங்களும் என்றும மானசிக சமுத்திரத்தில் நடைபெறுகின்றன. எவ்வாறெனில், நாம் சமுத்திரத்தைச சாதாரணமாகப் பார்க்கும் பொழுது அதில் சில தோணிகளும், மீன் பிடிப்போருடைய வத்தைகளும், பாய்க் கப்பல்களும், புகைக் கப்பல்களும், வெள்ளி யநிறமுள்ள நுரைகளும் சதாகாலமும் ஓயாது அடித்துக் கொண்டிருக்கின்ற அலைகளுமே காணப்படுகின்றன. இதனால், 'சமுத்தி

ரத்தினிடத்தில் நாம் இப்பொழுது சொன்ன பொருள்கள்தானிருக்கின்றனவென்று உறுதியாகக் கூறமுடியாது. ஏனென்றால் இவ்விதப் பொருள்கள் சமுத்திரத்தில் மேலாகமிதக்கக்கூடியவை. இவ்விதம் மேலாக மிதக்கக்கூடிய பொருள்களை மட்டும் கண்டு சமுத்திரத்தில் அவை மட்டுமே அடங்கியிருக்கின்றன என்று சொல்ல முடியாததுபோல, இப்பொழுது நம் கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாய் (மேலெழுந்த வண்ணம்) தோன்றுகின்ற இந்த ஜென்மமும் இதன் சம்பவங்களும் மாத்திரமே மனிதனைச் சார்ந்தவை என்றும், இவனது மனமாகிய சமுத்திரத்திலுள்ளே வேறுபொருள்கள்— ஜென்மாந்திரங்கள்— கிடையாவென்றும் தீர்மானிக்க முடியாது. இனி, உங்களுடைய மானசிக சமுத்திரத்தின் மேலே மிதக்கக்கூடிய பொருள்களையும் அவை உள்ளே ஆழ்ந்து செல்லும் முறையையும் கூறுவோம். இப்பொழுது உங்களுடைய மானசிக சமுத்திரத்தில் நாம் இங்கு பிரசங்கம் செய்துகொண்டிருக்கின்ற பொருள்கள் மட்டுமே விளங்கிக் கொண்டிருக்கின்றன. அக்காரணத்தினால்தான் நாம் சொல்லி வந்த விஷயங்களை இப்பொழுது சொல்லச் சொன்னால் அவை சொல்லக்கூடிய நிலைமையில் மேலாக இருந்து மிதந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது இவ்விதம் மிதந்து கொண்டிருக்கின்றதாக உங்களுக்குத் தோன்றுகின்ற இதே விஷயங்கள் இன்னும் சிறிதுநாட்சென்றால் உங்களுடைய மானசிக சமுத்திரத்திலே அமிழ்ந்து போகக்கூடியனவாகவும் நேரும். அந்த அனுபவத்தை இப்பொழுதே பார்க்கலாம். நாம் இதுவரையில் சொல்லிவந்தவிஷயங்களை சிறிதும்விடாமல் அவ்வாறே சொல்லிப்பாடம் ஒப்பிப்பதுபோல ஒருவருக்குஞ்சொல்லமுடியாது. ஆனால், முக்கால்பாகமும் சொல்லக் கூடியவர்களும் இருக்கக்கூடும். அப்படியானால் மீதி 'கால்' பாகம் எங்கே போய்விட்டது? 'கால்பாகம்' மானசிக சமுத்திரத்திலுள்ளே ஆழ்ந்து போய் விட்டது. முக்கால்பாகம் மிதந்து கொண்டிருப்பதால் கைக்குள் வைத்திருக்கும் பொருள்கள்போல் கேட்டவுடன் எடுத்துக் கொடுக்க முடியும். மீந்துள்ள கால்பாகத்தையும் எடுத்துக் கொடுக்க வேண்டுமென நிர்ப்பந்தம் செய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? யோசனை செய்யச் செல்வீர்கள். 'யோசனை' என்னும் ஆழ்ந்த விசாரத்திற்கு (ஆராய்ச்சிக்கு) ச்செல்லும்பொழுது நாம் பிரசங்கம் செய்து

கொண்டிருந்தால் நாம் சொல்லுகின்ற விஷயம் உங்களுக்குச் சிறிதேனும் புலப்படுமா? புலப்படாது. ஏன்? நீங்கள் ஒவ்வொருவரும் பிரத்தியக்ஷ ஞானத்தைவிட்டு, மானசிக சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற பொருளைத் தேடுவதற்காக 'ஸ்மரணை ஞானத்தைக்' கருவியாகக்கொண்டு யாத்திரை செய்யத்தொடங்கி விட்டீர்கள். இவ்வாறான யாத்திரையிலும் மிகுந்த ஆழத்தில் போகாத "விஷயங்களாகிய (கனமில்லாத— இலேசான) பொருள்களைத்தான்" முதலில் நீங்கள் சந்தித்திருக்கக்கூடும்!

அவ்வாறு சந்தித்த பொருள்களைத்தான் உள்ளேயிருந்தும் ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வந்து சொல்லக்கூடும். மிகமிக ஆழத்தில் போனவைகளைத் தேடிப்பிடிப்பதற்கு "ஸ்மரணைஞானம்" என்ற கருவிக்கு எவ்வளவு எவ்வளவு பலம் குறைந்திருக்குமோ அவ்வளவு அவ்வளவு கஷ்டமாயும், எவ்வளவு எவ்வளவு பலம் மிகுந்திருக்குமோ அவ்வளவு அவ்வளவு எளிதாயுமிருக்கும்.

உதாரணமாக: கிணற்றுக்குள்ளே கிடக்கின்ற பொருள்களை எடுப்பதற்காகத் தண்ணீரில் மூழ்கும் ஒருவன் "தான் எவ்வளவு மட்டும் சுவாசத்தையடக்கித் தண்ணீரில் மூழ்கச் சக்தியுடையவனாயிருக்கின்றானோ அவ்வளவுமட்டும் அவனுக்கு அந்தவேலை எளிதாயும் அவ்வாறான சக்தி குறைந்தவனுக்கு அவ்வேலை மிகக்கஷ்டத்தினால் சாதிக்கத்தக்கதாயு மிருக்கும். சிலர்க்கு அந்தவேலை முழுதும் சாத்தியமற்றதாயுமிருக்கும்.

அவ்விதம் கிணற்றில் மூழ்குபவன் முதலாவது மூழ்கும் பொழுது கிணற்றின் மேல் தட்டிலே கிடக்கின்ற சாமான்களை மட்டும் எடுத்துவருவான். மீண்டும் இரண்டாவது முறை மூழ்குப்பொழுது கிணற்றின் நடுத்தட்டுவரை சென்று அங்குள்ள சாமான்களைக் கண்டு கொண்டுவருவான். மூன்றாவது மூழ்கும் பொழுதோ மிக ஆழமான கிணற்றின் அடித்தட்டுவரை சென்று அங்கு கிடக்கின்ற பற்பல பொருள்களையும் கண்டெடுத்து வருவான். இதுபோல ஒருவன் மானசிக (அதாவது மனமாகிய) சமுத்திரத்தில் சிறிது சிறிதாக மூழ்கி— ஒருமுறை, இருமுறை, பன்முறை மூழ்கி— "ஸ்மரணசக்தி" என்னும் (நீர் மூழ்கு) முறையில் தேர்ச்சி பெறுந்தோறும் அவன் மானசிக சமுத்திரத்திலுள்ள பற்பல அபூர்வ வஸ்துக்களைக் கண்டெடுத்து வருவான்.

முத்துச்சிப்பி, பவழக்கொடி முதலியனவெல்லாம் சமுத்திரத்தின் மிக ஆழமான அடித்தட்டிலே கிடப்பதுபோல, நீண்டகால சம்பவங்கள்,-- ஜென்மாந்தரங்கள்-- ஜன்மாந்தர விஷயங்கள் இவை யாவும் நமது மானசிக சமுத்திரத்தின் அடித்தட்டிலேயே சென்று கிடக்கின்றன. அவ்வாறு மிக ஆழத்திலுள்ள முத்துச் சிப்பிகளை கடலோடிகள்- முக்களிப்பு வித்தையில் தேர்ச்சி பெற்றோர்- மிக தைரியமாக முக்களித்து அச்சமுத்திரத்தினின்றும் வெளியே எடுத்து வருவதுபோல் நாமும், "ஸ்மரணாசக்தியை" விருத்தி செய்வதாகிய நீர்மூழ்கு வித்தையில்— முக்களிப்புத் தொழிலில்— தேர்ச்சிபெற்று "மானசிக சமுத்திரத்தில் மூழ்கி ஆழ்ந்து சிந்திப்போமானால்— ஆராய்வோமானால்—" நமக்கும் மிக மிக அரிய பொருள்கள்— முற் பிறவிகள், அவற்றில் நிகழ்ந்த சம்பவங்கள்' இவை யாவும் கிடைக்கும்; அறியலாகும். இந்தத் தத்துவத்தை கீதையிலே கண்ணன் அருள்புரிகின்றார்:— "அர்ஜுனா! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் சென்றன; நான் அவைகளை முற்றும் அறிவேன்! பரந்தப! நீ அறியாய்!" இந்த திவ்ய வாக்கு ஸ்மரணாசக்தியுடைய ஒரு யோகியின் செயலை நிரூபிக்கின்றது. இதனால், "மறந்து போகின்ற விஷயங்கள்" என்பவைகளை "மானசிக சமுத்திரத்தில் மறைந்து போனவை" என்று சொல்வதில் யாதொரு குற்றமுமில்லை! "கால் வரிசை விஷயங்கள்" மறந்து போனதன் காரணம் ஷை விஷயங்கள் அழிந்துவிட்டன என்பதுமல்ல, அதனால் தெரியாமற் போயின என்பதுமல்ல. ஆனால், அவை மானசிக சமுத்திரத்தில் மூழ்கிப் போனமையால் அவை யொவ்வொன்றும் அங்கு மறை பொருளாக இருந்துகொண்டே இருக்கின்றன, என்று சொல்ல வேண்டும். இந்த சபையில் ஸ்மரணை சக்தியுடையோர் ஒவ்வொருவருக்கும் இந்தப் பிரசங்க விஷயங்களைச் சிறிதும் விடாமல் மானசிக சமுத்திரத்தினின்றும் எடுத்து கொண்டுவர சாத்தியப்படலாம். அதுபோல, இதற்கு முன் எவ்வளவு ஜன்மங்கள் உண்டாயிருக்குமோ, அவ்வளவு ஜென்மங்களிலும் ஒவ்வொருவரும் தமது உற்றார் உறவினருடன் எவ்வாறெல்லாம் வாழ்க்கை முறையை நடத்திவந்திருக்கிறார்களோ அவ்வாறான விஷயங்கள் யாவும் இப்பொழுதும் ஒவ்வொருவருடைய மானசிக சமுத்திரத்திலும் இருந்துகொண்டேயிருப்பதால் அவர்கள் ஸ்மரணை ஞான முதிர்ச்சிபெறும் பொழுது அவை யாவற்றையும் நன்றாகஎடுத்துக் கூறமுடியும்.

மதிப்புரை.

ஸ்ரீ சத்குரு கீதை: இப்பெயர் கொண்டதோர் புத்தகம் வரப்பெற்றோம். ஸ்காந்த புராணத்திலிருந்து இஃது தமிழில் இனிய செய்யுள் வடிவமாக மொழி பெயர்க்கப்பெற்று, "பாலக்காடு, புஸ்தக வியாபாரம் பிரும்மஸ்ரீ R. சுப்பிரமணிய வாத்யாரவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றது. உயர்ந்த காயிதத்தில் மனோகரமாக அச்சிடப்பட்டுள்ளது. ஹிந்துக்களுடைய வீடுகளில் தவறாமலிருக்கவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று. விலை அணா 4. வேண்டுவோர் ஸ்ரீமான் சுப்பிரமணிய வாத்யாரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

நித்யாஹ்நிகம். பொழுது புலர்ந்தது முதல் நித்திரைக்குப் போகும்வரை ஒவ்வொரு அந்தணரும் அனுஷ்டிக்கவேண்டிய அனுஷ்டான முறைகள் அடுக்கடுக்காகவும் அழகாகவும் எடுத்து விளக்குகின்றது இப்புத்தகம். பளபளப்பான காயிதத்தில் அழகான தேவநாகர எழுத்தில் அச்சிட்டு, சிறந்த காலிகோ பைண்டு செய்து, இப்புத்தகத்திலடங்கிய விஷயங்களுக்குத்தக்கவாறு இதன் மதிப்பும் சிலாகிக்கத்தக்கதாக அமைந்திருக்கின்றது. இதுவும் ஸ்ரீமான் சுப்பிரமணிய வாத்யாரவர்களாலேயே வெளியிடப்பட்டிருக்கின்றது. மதவிஷயமான பக்தியொழுக்கங்கள் குறைந்துவருகின்ற இக்காலத்தில் ஸ்ரீமான் சுப்பிரமணிய வாத்யார் அவர்கள் இதுபோன்ற உபயோகமான புத்தகங்களை வெளியிட முன்வந்திருப்பது மிகப்பாராட்டத்தக்கது. விலை அணா 6.

சாத்துவிக ரோப்பனம். இஃது பட்டாம்பி, மஹோபாத்யாயர் பிரும்மஸ்ரீ K. சம்புசர்மா அவர்களால் சிறந்த கற்பனையுடன் ஸம்ஸ்கிருத சுலோக வடிவமாக எழுதப்பட்டதோர் கற்பனை நூல். பூலோகமெங்கும் வாதித்து வரப்பெறுகின்ற சாத்துவிக நிகழ்ச்சியைக் குறித்து பற்பல ஜெந்துக்களும் ஒருமகாநாடுகூடி அதில் தம்தம் அபிப்பிராயங்களைக்குறித்து அவை உபந்யாசஞ் செய்வதாக கவி வர்ணித்திருக்கின்றார். எந்தக் கக்ஷியிலும் சேராமல் பொது நோக்கத்தோடு வெளியிடப்பட்டிருக்கின்ற இப்புத்தகத்தை முறையே இங்கிலீஷிலும் தமிழிலும் வெளியிட்டால் பொதுநன்மை விருத்தியாகும். எல்லா விஷயங்களிலும் ஒத்துழையாமையினாலுண்டாகின்ற தீங்குகளையும் ஒத்துழைப்பினாலுண்டாகின்ற நன்மைகளையும் இந்த நூல் மிகச் சாதுரியமாக வெளியிடுகின்றது. விலை அணா 8.

"நீடா பாபிமானி." பெயருக்குத்தக்க விஷயங்கள் தாங்கி சாவகக் காலிலிருந்து வாரமொருமுறை வெளிவருகின்ற இப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூபா மூன்றே.

"ஜீவபீதா." இஃது கள்ளிக்கோட்டை ஆர்ய சமாஜத்தின் துண்டுப்பிரசுரங்களில் ஐந்தாவதாக வெளிவந்திருக்கின்றது. மனிதவர்க்கத்திலுட்பட்ட சகலரும் வேதம் முதலிய மத நூல்களைக் கற்று மேன்மை பெறலாமென இதில் தக்க மேற்கோள்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. இதை மலையாள பாஷையில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள ஸ்ரீமான் T. நாராயண நம்பியார் அவர்கள் B. A. இன்னும் இதுபோன்ற பல பொது நூல்களை எழுதி வெளியிடுவதாகவும் அறிந்து சந்தோஷிக்கின்றோம். இதன் விலை அணா ஒன்றுதான்.

வரப்பெற்றோம்.

இந்து சாதனம் (யாழ்ப்பாணம்), தமிழ்நாடு (சேலம்), மகாவிகட தூதன் (சென்னை), தொழில் (சிந்தாத்திரிப்பேட்டை சென்னை), கேரள கௌமுதி (ஆலப்புழை), ஆர்ய தர்மம் (கும்பகோணம்), என்ற மாதாந்தப் பத்திரிகைகளும், தமிழகம் (கோலாலம்பூர்), சமரச போதினி (தஞ்சாவூர்), என்ற வாரம் இருமுறைப் பத்திரிகைகளும், கிருஷிக மித்திரன் (அடையார், சென்னை), பிரஜானுகூலன் (திருச்சி) நாடார் நண்பன் (செய்யாற்றின்கரை), இந்திய விவசாயம், (திருச்சி) பாண்டிய குலதீபம் (மதுரை), க்ஷத்திரிய மித்திரன் (தண்டையார்பேட்டை, சென்னை), தர்ம சீலன் (ஜார்ஜ் டவுன், சென்னை), சுதேசாபிமானி, சாரதா (மலையாளம்), என்ற மாதாந்தப் பத்திரிகைகளும், நாடார்குலமித்ரன் என்ற மாத மும்முறைப் பத்திரிகையும் வரப்பெற்றோம். இவற்றைப்பற்றி பின்னர் விவரிப்போம்.

"தமிழகம்." தமிழர்களின் அகங்குளிருமாறு வெளிவருகின்ற பத்திரிகைகளில் இதுவுமொன்று. இது கோலாலம்பூரிலிருந்து வாரம் இருமுறை வெளிவருகின்றது. மலாய் நாட்டில் வாழும் மக்களுக்கும் உலக முன்னேற்றத்திற்குமாக உழைக்கின்ற இப்பத்திரிகையில் பல அருமையான விஷயங்கள் வெளியாகின்றன. இதன் வருஷசந்தா ரூ. 15-0-0

"தாருல்இஸ்லாம்." இது தஞ்சை ஜில்லா நாச்சியார்கோயில் முஸ்லீம் சங்கத்தினின்றும் மாதமொருமுறை வெளியாகின்ற சிறந்த பத்திரிகை. இஸ்லாத்தின் தத்துவத்தைத் தமிழ் மக்களுக்கு எடுத்து விளக்குவதே இதன் தற்கால உத்தேசமாயினும் 'எல்லாமதமும் இறைவன்மதமே' என்ற உத்தமக்கொள்கையை விவரிக்கின்ற இப்பத்திரிகை எல்லோருக்கும் நன்மையளிப்பதாகும். இதில் வெளியாகும் விஷயங்களும் பதிப்பின் அழகும் குறிக்கத்தக்கன. வருஷசந்தா ரூ. மூன்றே.

"ஹிந்தீப்பிரசாரக." தாய்நாட்டில் தோன்றிய சகோதரர் யாவரும் தமது அபிப்பிராயங்களை ஒருவருக்கொருவர் நன்றாக அறிந்துகொண்டு பரஸ்பர நன்மைபெறுவதற்காக இந்தியர் அனைவரும் ஹிந்திபாஷை

யைக்கற்றுக் கொள்வது நலமென்று இப்பத்திரிகை பிரசாரஞ் செய்து வருகின்றது. இந்தியாவில் தற்காலம் ஏறக்குறைய 14கோடி ஜனங்கள் ஹிந்தி சம்பந்தமான பாஷையை வழங்கிவருவதால் மற்றுள்ளோரையும் அதேபாஷை கற்றுக்கொள்ளும்படி செய்வது நலந்தான். ஒற்றுமையே இதன் முக்கிய உத்தேசமாயினும் இந்தியர் ஏகபாஷையினராவது அவ்வற்றான்மைகளைக் குறிப்பிடும். தமிழர்கள் தாமே ஹிந்தி கற்றுக்கொள்ளும்முறை இதில் தெளிவாக வெளியிடப்படுகின்றது. பண்டித ஸ்ரீமான் 'ஹரிஹர சர்மா' அவர்களின் விடாமுயற்சியும் ஊக்கமும் நல்லபயனையடைந்து வருவதாகவே சொல்லவேண்டும். இதன் வருஷசந்தா ரூ. 3-0-0

வேண்டுவோர்:- "ஹிந்திப்பிரசார காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை" என்று எழுதிக்கொள்ளவும்.

"ஸ்ரீலங்கா." இது இலங்கையைச் சார்ந்த வட்டுக் கோட்டையினின்றும் மாதம் ஒருமுறை வெளிவருகின்றது. நல்ல விஷயங்கள் அடங்கியுள்ளன.

கொழும்புநகர் ஸ்ரீவிவேகானந்த சங்கத்தின் வருஷஅறிக்கை. பல பிரபலஸ்தர்களால் நிர்வகிக்கப்பெற்று வருகின்ற இச்சங்கம் நன்கு வேலைசெய்துவருவதாக இதன் வருஷாந்த அறிக்கையே தெரிவிக்கின்றது. நமக்குக் கிடைத்துள்ள அறிக்கைப் பத்திரத்தில் மேற்படி சங்கத்தின் மூலமாக நடைபெறுகின்ற புத்தகசாலை, சமயவகுப்புப்பாடம், உபந்நியாயநிகழ்வு, பல பிரபலஸ்தர்களின் விஜயம், சங்கத்தின் மூலதனம், வரவு செலவு முதலியன வெளியிடப்பட்டுள்ளன. சென்ற வருஷத்தில் பிரும்மஸ்ரீ ஸ்வாமி சதானந்தா அவர்களும், புரோபஸர் R. K. கல்கர்னீ, ஸ்ரீமான் M. S. சுப்பிரமணிய அய்யர், பண்டிதஸ்ரீ S. மயில்வாகனம் முதலியவர்களும் மதசம்பந்தமான விஷயங்களைக் குறித்துப் பலஅரிய பிரசங்கங்கள் புரிந்துள்ளனர். சங்கம் நன்கு வேலைசெய்வதையறிந்து சந்தோஷிக்கின்றோம்.

ஸ்ரீபச்சம்மாள் விதவாசிரமம். இப்பெயருடன் பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆசிரமம் வரவர விருத்தியடைந்து வருகின்றது. ஸ்ரீமதி பச்சம்மாள் "இந்திய விதவைகளின் நிலைமைக்கு இரங்கி, அவர்களுக்கு ஒரு ஆதரவளிக்கவேண்டுமென" மிகவும் பாடுபட்டதாக தெரிகின்றது. இந்திய விதவைகள் எங்கும் யாதொரு ஆதரவுமின்றி வருந்துகின்ற இந்திய நாட்டில் இத்தகைய அபலாசிரமங்கள் ஆங்காங்கு தோன்றுவது தேசத்தின் நன்மையேயாகும். ஸ்ரீமான்களான M. மஹாதேவ முதலியார், E. சுப்புக்கிருஷ்ணையா (பிரம்மசமாஜம் ஸெக்ரட்டரி) முதலிய பத்துப்பிரபல தனவான்கள் முயன்றிருப்பது பாராட்டத்தக்கது. மற்ற விபரங்கள் "ஸ்ரீமான் E. சுப்புகிருஷ்ணையா, பிராஹ்மோ சமாஜம், கண்டோன்மெண்ட். பங்களூர்." என்ற விலாசத்திற்கு எழுதிக் கேட்கவும்.

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

அன்பேயுருவாயமர்ந்திருக்கும் மஹாஜனங்களே! பூலோகத்தில் நோயற்ற வாழ்வை குறைவற்ற செல்வமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அனுபவமும் அப்படியே. ஜனனம்முதல் மரணம் வரை நோயாயிருந்தால் ஒரு பிரயோஜனமுமில்லை. அது நரகவாசம். ஆரோச்யத்தோடு வாழ்வதுதான் சிறந்ததும் சிலாக்கியமுள்ளதுமான செல்வம். கண் இருப்பதன் பயன் கண் கெட்டவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். "சரீரம் தர்மவாழ்க்கைக்கு முதற்கருவி." சரீரமிருந்தால் எல்லாப் பொருள்களையும் அடைந்துகொள்ளலாம்.

நதிகளிற்சிறந்தது கங்கைநதி; தருமத்தில் சிறந்தது பிறர் பிணிதீர்த்தல். சரீரம் நோயுற்றால் சகலபலமும் (சக்தியும் சாமர்த்தியமும்) குன்றும். ஆரோக்கியத்தினால் ஆயுள் விருத்தியாகுமென்று ஆயுர்வேதம் முரசறைகின்றது.

ஆரோக்கியத்தின் மூலகாரணம்.

ஆரோக்கிய (சுகம்) உணவிலிருந்து உண்டாதும். ஆரோக்கியத்தின் ஆணிவேர் உணவுபொருள்களைத் தெரிந்தெடுப்பதில் பதிந்து கிடக்கின்றது. ஒரு மனிதனுக்கு ஆரோக்கியம் குறையுந்தோறும் ஆகாரம் குறையும். அருசிதான் உணவுமட்டுப்படக்காரணம். அருசி (அன்னத் துவேஷம் அல்லது ஆகாரத்தின் வெறுப்பு) நோயினாலுண்டாகும். நல்லுணவு நோய்வாராமல் தடுக்கும்.

"நல்லுணவு" என்பது இதமான ஆகாரமேயாம். ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு இதமான ஆகாரம் உண்டு. சரீரத்தின் நன்மைக்கேற்ப அதனை ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.

இருவகை உணவு.

மனிதர்களின் உணவு இரண்டுவிதம். ஒன்று மரக்கறியுணவு. மற்றொன்று மாமிச உணவு. இக்காலத்தில் சிலர் இரண்டும் சேர்க்கின்றார்கள்.

கடவுளின்நியமப்படி மரக்கறிஉணவை உட்கொள்ளும் பிராணிகளின் உறுப்புகளுக்கும் மற்ற பிராணிகளின் உறுப்புகளுக்கும் அமைப்பிலேயே வேற்றுமை உண்டு. மாமிசந்தின்கின்ற ஜெந்துக்களின் கருவிகாரண அமைப்பு வேறு; பலம்வேறு; சுபாவம் வேறு.

* இஃது ஸ்ரீ ஸதானந்தசுவாமிகளால் கொழும்பு நகர் தம்பய்யா முதலியார் சத்திரத்தில் 10-11-21ல் செய்யப்பெற்ற உபந்நியாசம்.

படைப்பில் வேற்றுமை.

புலி முதலான ஜெந்து மற்றொரு ஜெந்துவை சுவாதீனப்படுத்துவதில் குரூர குணத்தை உட்கருவியாகக்கொண்டிருக்கின்றது. அவற்றின் வெளிக்கருவிகளாகிய அங்கங்களும் கூர்மையான நகங்கள் வாய்க்கப்பெற்றிருக்கின்றன. அவற்றின் பற்களும் பிறஜெந்துக்களைக்கொன்று தின்னக்கூடியவாறு கூர்மையுள்ளனவாயும் கொக்கிபோல் சிறிது வளைந்தனவாயுமிருக்கின்றன. அந்தஅவயவங்களின் அமைப்பே மற்ற பிராணிவர்க்கங்களை பயமுறுத்துந் தன்மையனவாயிருக்கின்றன என்றாலும் குற்றமில்லை!

மாமிசவுணவை ஏற்காத ஜெந்துக்களாகிய எருமை, ஆடு முதலானவைகளின் பல் ஒருநிறமாயிருக்கின்றது. அந்தப்பல்லிலே ஒருவிதம் இரைப்பைக்கும் நல்ல அமைப்புண்டு. இனி, மாமிசந்தின்னும் பக்ஷிகளின் அங்கங்களும் கொடூரமானவை. சாக (மரக்கறியுணவு) பக்ஷிணிகளான பக்ஷிகளைப்பார்க்கும்பொழுது இதன் உண்மை நன்றாகத் தெரியும். மனிதர்களை எந்த வர்க்கத்தில் சேர்ப்பது? மனிதவர்க்கமுழுதிற்கும் மரக்கறியுணவும், மிருகவர்க்கத்தின் சிலபகுதிக்கு மாமிசவுணவுமாக இயற்கையிலே கடவுள் அமைத்திருக்க, இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்ட மனிதர்களை மூன்றாவது முறையாகக் கணக்கிட வேண்டாமா என்று சில மரக்கறியுணவு வாதிகள் வாதஞ் செய்கின்றார்கள்!

இனி, எல்லாக் கேள்விகளுக்கும் ஏகசமாதானமாக நாம் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் மனித வர்க்கத்தின் சரீர அமைப்பைக்கடவுள் எப்படி அமைத்திருக்கின்றார் என்று தெரிந்து கொள்வதே. அவற்றின் அமைப்பே நமக்குப்போதுமான அறிவைப்புகட்டுகின்றது. நாம் கவனித்துக்கொண்டால் எல்லாம் எளிதில் விளங்கும். இயற்கையமைப்பே பூலோக சர்வகலாசாலையாகும்.

* கல்வியும் கைத்தொழிலும்.

அன்பே யுருவாயமர்ந்திருக்கும் மகாஜனங்களே! கல்வி என்னும் பதமானது வித்தைஎன்னும் பதத்திற்குச்சரியானபொருள். இரண்டும்ஒரேவிஷயத்தைக்குறிக்கும். மனித உருவத்தோடு பிறந்திருக்கிற எல்லோருக்கும் கல்வி இன்றியமையாதது. கல்வி இல்லாவிட்டால் மனிதன் என்று சொல்லமுடியாது. கைத்தொழில் இல்லாவிடினும் அப்படியே! கல்விக்கும் கைத்தொழிலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. கைத்

* இஃது ஸ்ரீ ஸதானந்தஸ்வாமிகள் 30-11-21ல் கொழும்பு விவேகானந்த சபையிற் செய்த பிரசங்கம்.

தொழிலை விட்டுக் கல்வியைத் தனியே நிறுத்தக்கூடாது. இரண்டுமிருந்தால் மனிதப்பிறப்பின் பிரயோஜனத்தையடையலாம். முதலாவது கல்வியைப்பற்றி ஆலோசிப்போம். கல்வி இரண்டுவிதமாகும். ஒன்று உலகக்கல்வி; மற்றொன்று ஆன்மகல்வி. உலகக்கல்வியை லௌகிக வித்தை என்றும், ஆன்மகல்வியை வைதிக வித்தையென்றும் தெய்விகக்கல்வி என்றும் சொல்வதுண்டு. உலகக் கல்வி மூலமாய் ஆன்மகல்வியைப் பின்பற்றவேண்டும். ஒருகுழந்தைக்கு 5 வயதானவுடன் அக்ஷராப்பியாசம் செய்து வைக்கின்றனர். [எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்.] அது ஒருபாஷையில் தேர்ச்சியடையச் செய்கிறது. ஒருவனுக்குப் போதுமான அறிவு ஒருபாஷையிலுண்டாகும் பொழுது அவன் நல்ல புகழ் பெறுகின்றான். ஆதலால் கல்வி என்பது, ஒருபாஷையிலுள்ள விஷயங்களை ஒருவன் கற்பதற்கு மார்க்கதரிசியாகிறது; வழிகாட்டியாகின்றது. ஆனால், இந்துமதத்தில் கல்வியைக்குறித்து மகரிஷிகள் ஒவ்வொரு நியமங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். 5, 6, 7, வயதுகளிலும் வித்தியாப்பியாசஞ் செய்ய ஆரம்பிக்கலாமென்பது சிலர் கொள்கை. வயதை சரீர மனோபலங்களுக்கு ஏற்றபடி தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சிசு கர்ப்பவாசத்திலிருக்கும்பொழுதே அது பிற்காலத்தில் கல்வி கற்கும்பொழுது பிரயாசமில்லாமலிருக்கவும், அதற்குக் கல்வியறிவை சீக்கிரம் உண்டுபண்ணவும் நமது இந்திய முனிவர்கள் சிலஅருமையான முறைகளை அநுஷ்டித்திருக்கிறார்கள். கர்ப்பத்தில் 9 மாதம் முடியும் பொழுது அந்த சிசுவுக்கு ஜென்மாந்தரவிஷயங்கள் ஞாபகத்திற்குவரும். இதையொரு உபநிஷத்து பின்வருமாறு கூறுகின்றது:—

"இனி, 9-வது மாதத்தில் சிசு எல்லாவிதமான அவயவலக்ஷணங்களும் பூர்த்தியாகப்பெறுகின்றது; முன்ஜென்மத்தைப்பற்றிய நினைவுகள் உண்டாகப்பெறுகின்றது.........!"

அது ஒரு விசேஷ காலம். அந்தத் தருணம் பார்த்து தாய் தந்தையரும், மற்றுமுள்ள விவேகிகளும் குருவின் மூலமாக "கல்வியபிவிருத்திக்குரிய மந்திரசக்தியை தாயினது உணவின்மூலமாக" கர்ப்பத்திலுள்ள சிசுவினிடத்தில் வளரச்செய்வார்கள். கர்ப்பிணியின் மனதில் கல்விவாசனை எண்ணங்களை உண்டாக்குவதற்குள் இந்தமுறையினால் முதலில் தாய்க்கு அறிவு விருத்தியாவதோடு பிறகு குழந்தைக்கும் எளிதாகக் கல்விகற்கக்கூடிய சாதனங்களும் விருத்தியாகின்றன. இவ்விதம் செய்ததனால் குழந்தைக்கு நல்லபுலமை உண்டாகும். பூர்வகாலத்தில் கர்ப்பத்திலிருந்தே ஞானம்பெற்ற வாமதேவ முனிவரும், சமீப காலத்தில் மலயாளம் காகச்சேரி பட்டேரியும் இதற்கு உதாரணபுருஷர்கள். நமது ஹிந்து மதத்தில் இதன் சம்பந்தமான, யுக்தியநுபவ நுட்பமான சடங்குகள் உண்டு. இனி, இந்தியதேசத்தில் பெரும்பாலும் 5-வது வயதில் கல்விகற்பிக்க ஆரம்பிக்கின்றனர். இப்போதைய கல்விமுறை ஆராய்ச்சியுடன் சேர்ந்ததல்ல. குழந்தைகளின் உள்ளேயுள்ள

இயற்கைக் கல்விவாசனையை உணர்ந்தே அவர்களுக்கு வெளிக்கல்வியை விருத்திசெய்யவேண்டும். ஹிந்துக்களின் முன்னோர்கள் குழந்தைகளின் பூர்வ வாசனையை அறிவதற்காக ஒரு நல்லசோதனை செய்வதுண்டு.

ஆறுவதுமாதம் பிறந்தவுடன் குழந்தைக்கு அன்னம் ஊட்டி தாய், தந்தை, குரு, உறவினர், மேதாவிகள் எல்லோரும் சேர்ந்து குழந்தைக்கு முன்னே பலகலைகளின் கருவியாகிய புஸ்தகம், வஸ்திரம், எழுதுகோல், இருப்புச்சாமான், பொன்வெள்ளியினாலமைந்த கருவிகள், ஆயுதவகைகள் இவற்றை அழகான முறையில் பரத்திவைப்பார்கள். அந்தக் குழந்தை அவற்றிலெதை சந்தோஷத்துடன் கவர்ந்து எடுத்துக்கொள்ளுகின்றதோ அந்தத்தொழிலை அதன்வாசனைக்குவுற்ற சாஸ்திரீயமான தொழிலென்று தீர்மானிப்பார்கள். இந்தமுறையை கிருஹியஸூத்திரம் என்றநூலில் இந்திய முனிவர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள். குழந்தைக்கு 5வயதாகும் போது இந்தவாசனை எந்தமுறையில் வளர்ச்சிபெற்று வருகின்றது என்று பரீக்ஷைசெய்யலாம், 10-வதுவயதில் மூன்றாவதுபரீக்ஷைசெய்து பார்க்கலாம். 12-வதுவயதில் முன்நடத்திய பரீக்ஷைகள் சரியானவைதானா அல்லது அவற்றில் தவறுதலுண்டா அல்லது அவை எவ்விதம் வளர்ந்து வருகின்றன என்றவிஷயங்களை இன்னும் சிறிது பரீக்ஷிக்கலாம். இந்நான்காவது பரீக்ஷையிலும் குழந்தையின் மனம் தொழிலில் செல்லாமல் வேறு தாய்தந்தையரின் தொழிலிலேயே செல்லுமானால், அந்தக்குழந்தையை அந்தக் கல்வியிலேயே கற்கவிடவேண்டும். அதனால் வெகுசீக்கிரம் விருத்தியாகும். க்ஷேமமடையும். ஒருதாய் வயிற்றில் பிறந்த 5 சகோதரர்களையும் ஒரே கல்வியில் நிறுத்த வேண்டாம். இப்போதைய ஜாதி சம்பிரதாயம் அக்காலத்திலில்லை. * குழந்தையின் கல்வி வாசனை எதில் இருக்கின்றதென அறிய வேண்டியது தாய் தந்தையரின் கடமை; உபாத்தியாயரின் கடமை. ஒருகுழந்தையின் வாசனையையறியாமல் வெவ்வேறு கல்வியிலும் தொழிலிலும் அவனைத் தள்ளிவிடுவது முற்றிலும் பிழை. கல்விகற்க வருகின்ற மாணாக்கர்களின் மனோவாசனை எதில் தீவ்ரமாய் விளங்குகின்றது என்ற ரகசிய தத்துவத்தைச் சீர்தூக்கியறியாமலும் விசாரணை செய்யாமலும் எல்லாக் குழந்தைகளையும் ஒரே இடத்தில் அடைத்து வைத்து ஒரேபாஷையாகிய வைக்கோலைத்தின்னும்படி செய்வது பெரும் தவறு.

* "பாருங்கள்! நான் ஒரு மந்திர கர்த்தா. எனது பிதா ஒரு வைத்யன். எனது அன்னை கல்லின்மேல் தானியத்தை வைத்துப் பொடிக்கின்றாள். நாங்கள் எல்லோரும் வெவ்வேறான ஒவ்வொரு தொழில்களில் ஏற்பட்டிருக்கின்றோம். பசுக்கள் ஜீவனத்திற்காக மேய்தல் ஸ்தலங்களுக்குச் செல்லும்பொழுது ஒவ்வொருவழியாகச் செல்வதுபோல நாங்களும் ஒவ்வொரு தொழில்களில் இருந்துகொண்டு, ஏஸோம! 'செல்வத்தை வேண்டி' உன்னைப் பூஜைசெய்கிறோம்;........"

[ருக்வேதம், 9. 112. 3.]

மரணத்தைத் தடுத்தல்:-

தேவத்துவ சித்தி.

[முன் தொடர்ச்சி]

2. சரீரத்திற்குள் விஷம் ஏறாமலிருப்பதற்குக் காரணமென்ன? சரீரத்திற்குள்ளே யிருக்கின்ற விஷப்பைகளில் விஷம் நிறைந்திருப்பதால். 3. சரீரத்தில் விஷம் ↓ தாரதம்மிய மனுசரித்து (ஏற்றத்தாழ்வாக) ஏறுவதற்குக் காரணமென்ன? சரீரத்திலுள்ள விஷகோசங்களில் விஷம் தாரதம்மிய மனுசரித்திருப்பதால். 4. சரீரத்தில் விஷம் ஏறினால் இறந்து போவதற்குக் காரணமென்ன? சரீரத்திலுள்ள விஷப்பைகளில் சுத்தி செய்யப்படாத விஷம் ஏறுவதால். 5. சரீரத்தில் விஷம் ஏறினால் இறவாமலிருப்பதற்குக் காரணமென்ன? சரீரத்திற்குள்ளேயுள்ள விஷகோசங்களில் சுத்தி செய்யப்பட்ட விஷம் நிறைந்திருப்பதால்.

இனி, இந்த ஐந்து நியாயங்களில் கடைசியிலே கூறப்பட்ட இரண்டு நியாயங்களை மட்டும் சிறிது விவரிக்கவேண்டும். மிகச்சூடான மணலை சீசாவுக்குள் நிறைக்கும்பொழுது அந்தச் சூட்டுமணல் சீசாவை எவ்விதம் வெடிக்கச் செய்கின்றதோ அதுபோலவே சுத்தி செய்யப்படாத விஷம் சரீரத்திலுள்ள விஷப்பைகளில் பிரவேசிக்கும்பொழுது விஷப்பைகளை வெடிக்கச்செய்வதோடு * அவற்றைப் பின்பற்றியுள்ள மற்ற பைகளையும் வெடிக்கச் செய்து முடிவில் சரீரத்திற்குள்ளேயுள்ள எல்லா கோசங்களுக்கும் அழிவை யுண்டாக்கின்றது; எனவே, அத்தகைய கோசங்களாலமைந்த சரீரமும் மரணமடைகின்றது.

விஷத்தைப் பற்றிய உண்மை.

இப்பொழுது சரீரத்தை வெடிக்கச் செய்தது எது? சூடு + மணல் =சூடுமணல். (மிகச்) சூடான இந்த மணலை சீசாவுக்குள் போட்டால்

↓ வினா: (க) சரீரத்திற்குள்ளேயுள்ள விஷப்பைகளில் பாதி பாகம் வரை விஷம் ஏறுவதற்குக் காரணமென்ன?

விடை: (க) சரீரத்திற்குள்ளே யுள்ள விஷகோசங்களில் பாதி பாகம்வரை விஷமிருப்பதால்.

வினா: (உ) சரீரத்திலுள்ள விஷப்பைகளில் முக்காலே அரைக்கால் பாகம் விஷம் ஏறுவதன்காரணம் மென்ன?

விடை: (உ) சரீரத்திலுள்ள விஷப்பைகளில் அரைக்கால் பாகம் விஷமிருப்பதால்.

* விஷப்பைகளை வெடிக்கச் செய்தல் என்பது, விஷப்பைகளின் ஆரோக்கிய வாழ்வுக்கு அனுகூலமான அணுக்களின் அமைப்பை உலைத்து விடுதலாம்.

இது சீசாவை உடைத்து விடுகின்றது. இதனால் சீசா உடைவதற்குக் காரணம் சூடு மணலென்று சொல்லலாம். அவ்விதம் சொல்வோமாயின், சீசாவை உடைத்த குற்றத்திற்கு சூடும் மணலும் (ஆகிய இரண்டும்) காரணங்களாகின்றன. உண்மையை கவனிக்கும்பொழுதோ அவ்விதம் சொல்வதற்கில்லை. எதனால்? சீசாவை உடைத்த குற்றம் சூட்டை மாத்திரஞ் சார்ந்ததாகும். அலத மணலின் மீதும் சுமர்த்தக்கூடாது. உதாரணமாக:— ஈரம் + மணல் = ஈரமணல். இந்த ஈரமணல் சீசாவை உடையாமல் வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது சீசாவை உடையாமல் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் ஈரமா? அல்லது மணலா? அல்லது அவ்விரண்டுஞ் சேர்ந்த ஈரமணலா? இங்குமாத்திரம் "இரண்டுந்தான்" என்று கூறவேண்டும். சீசாவை உடைக்கும் விஷயத்திலோ "சூட்டை மாத்திரம்" காரணமாகக் கூறவேண்டும். ஏனெனில் மணல் இரண்டிடத்திலும் இருக்கின்றது. இது போல சரீரத்தை வெடிக்கும்படி செய்வது விஷத்தின்கண்ணுள்ள சுத்தியில்லாத அம்சந்தான். ஆகவே, "சுத்தியில்லாத விஷம் சரீரத்தை அழிக்கின்றது" என்ற இடத்தில் 'விஷத்திலுள்ள சுத்தியில்லாத ஆம்சம் (பாகம்) மட்டுமே சரீரத்தையழிக்கின்றது, என்று பொருள் கொள்ள வேண்டியதுடன் "விஷம் சரீரத்தை யழிப்பதல்ல" என்று தெரிந்து கொள்ளவேண்டும். இந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காகவே விஷத்தை வகுத்தும் விரித்தும் உரைக்கவேண்டியது அவசியமாயிற்று.

முன் விவரித்த காரணங்களால் "சுத்திசெய்யாத விஷமும் விஷமே, சுத்திசெய்த விஷமும் விஷமே" என்றும், சுத்தி செய்யாத பொழுதிருந்த விஷமே சுத்தி தெய்த பொழுதுமிருக்கின்றதென்றும், சுத்தி செய்ததனால் 'விஷம்' என்ற வஸ்து எங்கும் போய்விடவில்லை என்றும் தெளிவாகும். இதை இனியும் சிறிது விளக்குவதற்காக 'சுத்தி செய்தல்' என்ற விஷயத்தைப் பற்றி ஒன்றுகூறவேண்டும். அதாவது ஒருவஸ்துவை சுத்தி செய்தல் என்றால் அதனோடு கலந்துள்ள அசுத்த வஸ்துவை (அல்லது அசுத்த வஸ்துக்களை) மாத்திரம் நீக்குவது என்று பொருளேயன்றி அந்த வஸ்துவையே மாற்றி விடுவது என்பதல்ல. உதாரணமாக:— கந்தக சுத்தியை எடுத்துக் கொள்வோம். "கந்தகத்தைச் சுத்திசெய்தல்" என்றால் "கந்தகத்தோடு கலந்துள்ள இதர அணுக்களை நீக்கிவிடுவது" என்றுதான் பொருள். அதுபோல் "விஷத்தை சுத்தி செய்வது" என்றால், அந்த விஷ அணுக்களைத் தவிர்த்து இதர அணுக்களை விஷத்தினின்றும் நீக்கிவிடுவது என்று தான் பொருள்.

விஷம் ஏறியும் சரீரம் இறவாமலிருத்தல்.

இனி, சரீரத்திற்குள்ளேயுள்ள விஷப்பைகளில் இங்கு தெரிவித்தபடி சுத்தி செய்யப்பட்ட விஷம் ஏறினால் இறவாமலிருப்பதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஈரமணல் ஸீ

ஸாவுக்குள் இருந்தால் அந்த ஈரமணலினால் வீஸா எவ்விதம் உடையாமலிருக்கின்றதோ அதுபோலவே சுத்தி செய்யப்பட்ட விஷமானது சரீரத்திலுள்ள விஷகோசங்களிலிருந்தால் அது அந்த கோசங்களையும் நாசமடையாமல் வைத்துக் கொள்ளும்; அந்த கோசங்களை யடுத்துள்ள உபகோசங்களையும் பாது காக்கும்; அவ்வாறே எல்லாக் கோசங்களுக்கும் நாசமின்மையாகிய ஆரோக்கிய நிலையில் சரீரத்தை — இறவாமல் — வைத்திருக்கும். இதற்கு இனியுமொரு உதாரணங்கூறுகின்றோம். பூரண ஆரோக்கியமுள்ள ஒரு சரீரத்தை சுத்தி செய்யாத விஷத்தின் ஒரு சிறிய அம்சமானது கொன்றுவிடுவது போல், அப்பொழுதே இறந்து போகத்தக்க — அத்தனை அபாய நிலையிலிராநின்ற — சிறிதும் பலமில்லாத ஒருசரீரத்தை சுத்தி செய்யப்பட்ட விஷமானது உயிர் கொடுத்துக் கைதூக்கி விடுவது பிரத்தியக்ஷமாகும். விஷப்பொருள்களைக் கையாண்டு சிகிச்சை செய்து வருகின்ற வைத்தியர்களுக்கு இது நன்றாகத் தெரிந்திருக்கும்.

மேற்கூறிய நியாயங்களையும் அனுபவங்களையும் ஊகித்துப் பார்ப்போர்க்கு விஷங்களினால் சரீரம் மரணமடையக் காரணமில்லை யென்றும், ஆனால் "விஷங்களினால் சரீரம் மரண மடையாமலிருக்க விரும்புவோர் சுத்தி செய்த விஷங்களைக் கொண்டு தமது சரீரத்திலுள்ள விஷகோசங்களை நிறைக்கவேண்டியதே அவர்கள் செய்ய வேண்டிய வேலை யாகும்" என்றும் நன்கு விளங்கும்.

இப்பொழுது படிப்போர்க்கு "சுத்தி செய்யாத வெள்ளைப் பாஷாணத்தையும் ஸௌவீரத்தையும் மற்றும் அவை போன்ற இதர பாஷாணங்களையும் பலர் உட்கொண்டு இறந்து போவதன் ரகசியம்" எளிதில் புலப்பட்டிருக்கும்.

எனவே, சந்நிபாத ஜ்வரங்களாலும் மற்றும் விஷபேதி முதலிய அபாயகரமான நோய்களாலும் திடீரென்று உயிர் நீங்கக்கூடிய சரீரங்களைக்கூட சுத்தி செய்த விஷங்கள் உயிரளித்துப் பூரண ஆரோக்கியந்தருவதில் ஆச்சரிய மொன்றுந் தோன்றுவதற்கில்லை!

விஷகோசம்: விஷங்களை ஏற்குமிடங்கள்.

உலகத்தில் எவ்வளவு விஷங்களிருக்கின்றனவோ அவ்வளவு விஷங்களுக்கும் இச்சரீரம் இடங்கொடுக்கின்றது. அவ்விதம் விஷங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய இடங்களுக்கே விஷகோசம் என்று பெயர். அந்த விஷ கோசங்களையெல்லாம் சுத்தி செய்த விஷங்களைக் கொண்டு நிறைத்துவிட்டால் அப்பால் விஷ சைனியங்கள் இச்சரீரத்தை எதிர்த்து நாசப்படுத்த இயலாது.

விஷப் பொருள்களை யறிதல்.

இனி, "விஷப்பொருள்களால் சரீரம் அழியக்கூடாது" என்ற எண்ண முடையவர்கள் உலகத்திலுள்ள எல்லா விஷங்களையும் முதலில்

தெரிந்துகொள்ள வேண்டும்.

அவ்விதம் தெரிந்து கொண்ட பிறகு அவை ஒவ்வொன்றையும் சுத்தி செய்து சரீரத்திலுள்ள விஷகோசங்களில் நிறைத்து விடவேண்டும். அவ்வாறு நிறைத்து விட்டால் சரீரத்திற்கு வெளியிலிருந்தும் வரக்கூடிய விஷச்சேனைகள் முற்கூறியபடி சரீரத்தில் சிறிதும் பிரவேசிக்க மாட்டா. எதனால்? சரீரத்திலுள்ள விஷகோசங்களில் சுத்தி செய்த விஷம் நிறைந்திருப்பதால்.* இத்துடன் விஷ வஸ்துக்களின் யுத்தம் நின்றுவிட்டது. இனி விஷத்தால் இச்சரீரத்திற்கு மரணமில்லை என்று தைரியமாகச்சொல்லலாம். இந்த சரீரத்தின் ஸ்திர வாழ்க்கையை நிலை நிறுத்துவதற்குரிய விஷங்களின் தேவைகள் இத்துடன் பூர்த்தியாகி விட்டன!

இனி சிருஷ்டியில் அடங்கிய விஷங்களின் பெயர்களைத் தெரிவித்து விட்டு இந்த அதிகாரத்தைப் பூர்த்தி செய்வோம்.

கடவுளின் படைப்பில் மொத்தம் 73 விஷப் பொருள்களிருப்பதாக சித்த சாஸ்திரங்களில் தீர்மானிக்கப் பட்டுள்ளன. அவைகளை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

1. ஜீவ விஷங்கள் அல்லது ஜீவ ⁕ பாஷாணங்கள்:— இவை தாமே பூமியில் ஒன்றாகச் சேர்ந்து உற்பத்தியாவதால் இவற்றிற்கு ஜீவ பாஷாணங்கள் என்பது காரணப் பெயராயிற்று.

2. நிர்மாண பாஷாணங்கள்:- இவை பல பொருள்களிலும் பலவிதமாகச் சிதறிக்கிடப்பவையாதலால் இவற்றை மனிதர்கள் ஒன்று சேர்த்து நிருமிக்கின்றனர். அக்காரணம் பற்றி இவைகளுக்கு நிர்மாண பாஷாணங்கள் என்பதும் காரணப்பெயரேயாம்.

3. மூலிகை பாஷாணங்கள்:— சிற்சில மூலிகைகள் பூமியிலுள்ள விஷசத்துக்களைத் தமது வேர்களாலும் ஆகாயத்திலுள்ள விஷசத்துக்களை இலைகளாலும் கவர்ந்து கொண்டு தமது உடலில் வைத்துக் கொள்ளுகின்றன. அவைகள் மூலிகை பாஷாணங்கள் என்று வழங்கப்படுகின்றன. இம்மூன்று வகைகளையும் முறையே விவரிப்போம்.

ஜீவ பாஷாணங்கள்.

1. பூமியினின்றும் தாமே உற்பத்தியாகின்ற விஷங்கள் 32. அவற்றின் பெயர்களாவன:—

1. கற்கடக பாஷாணம். 2. கோளக பாஷாணம். 3. சூத பாஷாணம். 4. அரிதார பாஷாணம். 5. கந்தக பாஷாணம். 6. வீர பாஷாணம். 7. வைக்கிராந்த பாஷாணம். 8. தால பாஷாணம். 9. மிருத பாஷாணம். 10. சிரபந்த பாஷாணம். 11. தொ

* "இரண்டு வஸ்துக்கள் ஒரே இடத்தை அடைக்க மாட்டா" என்று முன் விளக்கப்பட்ட நியாயத்தை நினைவுறுத்துகிறோம்.

⁕ பாஷாணம் என்றாலும் விஷம் என்றாலும் பொருள் ஒன்றே.

ட்டி பாஷாணம். 12. குதிரைப் பல் பாஷாணம். 13. சங்க பாஷாணம். 14. கௌரி பாஷாணம். 15. துத்த பாஷாணம். 16. பலண்டு பாஷாணம். 17. சாந்த பாஷாணம். 18. லிங்க பாஷாணம். 19. சரக் காண்ட பாஷாணம். 20. தாளக பாஷாணம். 21. மனோசிலை பாஷாணம். 22. ஔபல பாஷாணம். 23. சலாங்க பாஷாணம். 24. கல்கரி பாஷாணம். 25. சல் பாஷாணம். 26. கஞ்சள பாஷாணம். 27. சிதாங்க பாஷாணம். 28. ச்யாம பாஷாணம். 29. சிலாமத பாஷாணம். 30. கார்முகில் பாஷாணம். 31. அப்ரக பாஷாணம். 32. வெள்ளைப் பாஷாணம்.

[நிர்ம்மாண பாஷாணங்கள்.]

2. நிர்மாண பாஷாணங்கள். அல்லது (வைப்புப் பாஷாணங்கள்) அவை முப்பத்திரண்டு. அவற்றின் பெயர்களாவன :—

1.	தொட்டிப் பாஷாணம்.		17.	ரக்த பாஷாணம்.	
2.	சிலாங்கி	...	18.	துத்த	...
3.	மிருதாசிங்க	...	19.	துரிசு	...
4.	தீமுறுகல்	...	20.	ரஜத	...
5.	கருமுகில்	...	21.	சூத	...
6.	ஜாதிலிங்க	...	22.	கந்தக	...
7.	வெள்ளை	...	23.	நீல	...
8.	கௌரி	...	24.	சோர	...
9.	சௌவீர	...	25.	காக	...
10.	குக்குடசிரகந்த	...	26.	நாக	...
11.	பாணகந்த	...	27.	இந்திர	...
12.	வைப்பரிதார	...	28.	பொற்றொட்டி	...
13.	பவழப்புற்று	...	29.	ஜெயவீர	...
14.	கோடாசொரி	...	30.	செம்புதொட்டி	...
15.	பஞ்சபக்ஷி	...	31.	அங்கண	...
16.	குங்கும	...	32.	கோளக	...

[மூலிகை விஷங்கள்.]

3. மூலிகை விஷங்கள் என்பது. அவைற்றின் பெயர்களாவன:–

1. எருக்கின் விஷம்.		5. காஞ்சிறை (எட்டிக் கொட்டை) விஷம்.	
2. கள்ளி	...	6. சேங்கொட்டை	...
3. கருநாபி	...	7. கரு ஊமத்தை	...
4. கொடிவேலி	...	8. அவுரி	...

9. * கருடக் கொடி விஷம்.

* வித்தில்லாமல் (அதாவது விதையில்லாமல்) விருக்ஷங்களுண்டாகாதது போல் வியாதிகள் தோன்றுவதற்குக் காரணமான விஷ அணுக்களில்லாமல் வியாதிகள் உண்டாவதில்லை. ஆகவே, சுத்தி செய்யப்

உப்பின் தேவை. இனி, பாஷாணங்களைப் போல் சரீரத்தின் ஜீவிதநிலைக்கு ‡ உப்புகளும் தேவை. உள்ளவைகளாம். அவைகளை இங்கு விவரிப்போம்.

“உப்பில்லாப் பண்டம் குப்பையிலே” என்பது ஓர் பழமொழி. உப்புச் சத்துக்கள் உள்ளவைகளே எல்லாப் பிராணி வர்க்கங்களும் விரும்புகின்றன. கடலிலுள்ள ஜீவப் பிராணிகள் சுகமே வாழ்வதற்கும் அங்குள்ள உப்புநீரே காரணமென்று சிலர் கூறுகின்றனர். தென்னை முதலிய விருக்ஷ வர்க்கங்களுக்கு உப்பை எருவுடன் கலந்து உபயோகித்தால் அவை அதிகம் செழிமையாக வளர்ந்து காய்க்கின்றன. மாடுகளுக்கு தீவனத்தோடு உப்பைக் கலந்து உபயோகித்தால் அவை ஆரோக்கியம் பெற்று வாழ்கின்றன. அவ்விதம் நாம் உப்பைக் கொடாவிட்டால் அவை தமது மூத்திரசத்தைச் சுவைத்துக் கெட்ட பழக்கங்களுக்கு உள்ளாகின்றன. இதுபோல் ஒவ்வொரு பிராணிகளுக்கும் உப்பின் தேவையுண்டென்று அறியவேண்டும். ஆனால் மனித சரீரத்தின் நல்வாழ்விற்கு மற்ற பிராணி வர்க்கங்களைப் பார்க்கினும் மிகுதியான —பற்பல— உப்பு வகைகள் வேண்டப்படுகின்றன.

உதாரணமாக:— ஒவ்வொரு மனிதனும் உப்பை உட்கொள்ளுங் காலத்தில் அது உடலை வளர்ப்பதற்குரிய ஒரு திரவியமென்றே நினைத்து விருப்பத்தோடு வயிற்றுக்குள் அனுப்புகின்றான். ஆனால், இந்த சரீரத்திற்கு உப்பின் தேவை எந்த நிலைமையிலிருக்கின்றது என்பதை அவன் கவனிக்கவேண்டியது அவசியமாகும். உலகத்தில் சில தேசங்களிலுள்ள மனிதர்களுக்கு தினம் 1 க்கு 2 ரூபா எடை உப்பும், வேறு சில தேசவாசிகளுக்கு ஒன்றரை ரூபா எடை உப்பும், மற்றுஞ்சில நாட்டினர்க்கு ஒரு ரூபா எடை உப்பும் தேவை யாயிருக்கின்றது. இவர்களில் குறைந்த பக்ஷம் ஒரு ரூபா எடை உப்பு சேர்க்காதவர்கள் காணப்படவில்லை. இந்தக் கடைசித் தரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு கணக்குப் பார்க்கும் பொழுது ஒரு மனிதனுக்கு ஒரு மாதத்தில் 30 ரூபா எடை உப்பு

படாத மேற்சொல்லப்பட்ட விஷங்களின் அணுக்களைத் தான் நோய்களின் விதைகள் — வியாதி பீஜங்கள் — என்று சரீர தத்துவ சாஸ்திரிகள் அங்கீகரித்திருக்கின்றனர்.

‡ 1913 —ம் வருஷம் பாரிஸில் ஒரு சிலாவடிவம் ஏலத்தில் விற்கப்பட்டது. இவ்வடிவம் பல வருஷங்களுக்கு முன் படகோனியாவில் 6 அடி 3 அங்குல முயரமுடையவனாகவிருந்த ஒருவனது தேகமாம். அவன் சிலரால் கொல்லப்பட்டுச் சுண்ணாம்பு உப்புக்களுடன் கலந்த தண்ணீரில் புதைக்கப்பட்டதால் அவனுடம்பு சிலாவடிவமாயிற்றாம். அவ்வடிவத்தில் இரண்டு வெட்டுக் காயங்களிருக்கின்றனவாம். எனவே, ஈஜிப்ட் மம்மீஸ், கல்கண்டு முதலிய பொருள்களுக்கும் உப்புக்குமுள்ள சம்பந்தத்தை எளிதில் ஊஹிக்கலாம். (கல்கண்டின் விபரம் அகஸ்தியன் 3-ாவது இலக்கம் வர்த்தமானக் குறிப்பில் காண்க.)

கட்டாயம் சேர்த்தே தீரவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு வருஷத்தி ற்கு 365¼ ரூபா எடையுப்பும் அதாவது ஒன்பதே அரைக்கால் பவுண் டும், 50 வருஷத்திற்கு 456¼ பவுண்டு உப்பும் தேவையாகின்றது. சுமார் 50 வயதுள்ள ஒரு மனிதன் தனது சரீரத்தின் மேற்பாகத்திலுள்ள ஒரு பள்ளத்தின் வழியாக (வாய் வழியாக) இவ்வளவு கனமுள்ள உப்பை அனுப்பி வந்திருப்பதாயறிகின்றோம்.

ஆனால், இவ்வளவு உப்பையும் சில சாக்குகளில் போட்டுக் கட்டி ஒரு தராசில் வைத்துப் பார்க்கும் பொழுது சுமார் 28½ துலாம் ஆகின் றது. இந்த இருபத்தியெட்டரை துலாங்கொண்ட சாக்கு உப்புகளையும் உள்ளே விழுங்கி வந்த சரீரத்தை ஷை தராசின் மற்றோர் பாகத்தில் வை த்துப் பார்ப்பதானால் அந்த சரீரம் இந்த இருபத்தியெட்டரைத் துலாத்தி லிருந்தும் எவ்வளவோ பங்கு குறைந்ததாகக் காணப்படும்! இவ்வளவு உப்பை வாங்கி உட்கொண்ட சரீரத்திற்கு ஒரு நாள் உப்பு ஸப்ளையை நிறுத்திவிட்டால் அது முகத்தைச் சுழித்துக் காட்டுகின்றது; அது அப் பொழுது தான் உட்கொள்ள வேண்டிய உணவையும் வெறுப்பாகத்தள்ளு கின்றது.

ஆதலால் இக்காலம் வரை கொடுத்து வந்த 456¼ பவுண்டு உப்புகளையும் உள்ளே வாங்கிக் கொண்ட இச்சரீரம் எவ்விதம் செலவு செ ய்திருக்கின்றது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கிய மல்லவா? ஆகவே, அந்த 50 வருஷத்திய உப்பின் செலவு விபரத்தை விளக்குவதற்காக முதலில் ஒருமாத உப்பை எடுத்துக்கொண்டு ஒரு ஆரா ய்ச்சி செய்வோம்.

இங்கு நமக்கு முன்னே ஒரு பெரிய மேஜையிருப்பதாகவும் அந்த மேஜையின்மேல் 30 படிகக் கிண்ணங்களிருப்பதாகவும் வைத்துக் கொள் வோம். இந்த ஒவ்வொரு படிகக் கிண்ணங்களிலும் ஒவ்வொரு ரூபா எடையுள்ள உப்பைப் போட்டு, அதில் 4 ரூபா எடையுள்ள தண்ணீரையு ம் வார்ப்போம். அதன் பின் அந்தக் கிண்ணங்களை ஒரு சிறுகுச்சியினால் கிளறுவோம். பிறகு ஷை கிண்ணங்களை மூடிவிடுவோம். இப்பொழுது உப்பைப்பார்க்கினும் நான்கு பங்கு ஜலம் விட்டது "உப்புகரைவதற்காக" என்ற சங்கதியை நாம் மறக்கக்கூடாது.

இவ்விதம் காலை நேரத்தில் 3 நாள் கிளறிவிட்டு 4 வது நாள் கா லையில் கவனிப்போம். இன்று ஷை கிண்ணங்களிலுள்ள தண்ணீர்யாவும் வெண்மையாக மேலே தெளிந்து காணப்படுவதோடு அந்தத்தெளிவின் அடியில் கருமையான அணுத்திரள் தங்கி யிருப்பதாகவும் தெரிகின்றது. இந்த 30 பாத்திரங்களிலும் மேலாகத்தெளிந்து காணப்படுகின்ற தண் ணீர் முழுதையும் (அடியிலுள்ள கரிய அணுக்கள் அசையாவண்ணம்) வேறொரு பெரிய பாத்திரத்தில் இறுத்துவிடுவோம். இதுபோலவே ஷை கரிய பொருளியாவற்றையும் மற்றொரு பெரிய பாத்திரத்தில் இறு த்து விடுவோம். இவ்விதம் செய்ததனால் உப்பினுடைய வெண்மையான

பாகமாகிய தண்ணீர் யாவும் ஒரு பாத்திரத்திலும் அதன் கருமையான அணுக்கள் மற்றொரு பாத்திரத்திலும் வந்து சேருகின்றது. இவ்விதம் தனித்தனியே எடுத்துக் கொண்ட இரண்டு பாத்திரங்களையும் வெயிலில் வைத்து வற்றும்படி செய்வோம். இப்பொழுது இரண்டு கிண்ணங்களி லிருந்த பொருளும் வெயிலில் காய்ந்து முறையே வெண்மையும் கருமை யும் பொருந்திய இரண்டு கட்டிகளாகிவிட்டன. இவற்றை மாலையிலெடு த்து மீண்டும் இவற்றின் நிறைக்கு 4 பங்களவு தண்ணீர் விட்டுத் தனித் தனியே கரையும்படி செய்து, அவை ஊரிக்கலந்து தெளிந்தபின் எடுத் துப் பார்ப்போம். மீண்டும் முன்போல் வெண்மையான பொருள் நிறை ந்த கிண்ணத்தின் அடிப் பாகத்தில் சிறிது கருந்த பொருள் தங்கியிருப் பதையும், அவ்வாறே கருமையான பொருள் நிறைந்த கிண்ணத்தின் மேற் பாகத்தில் சிறிது வெண்மையான ஜலம் ததும்பி நிற்பதையும் கா ணலாம்.

இவற்றை மறுபடியும் கலங்காமல் எடுத்து முறையே வெண்மை யான தண்ணீரை வெண்மையான பொருளுக்காக வைத்துள்ள பாத்திரத் திலும், கருமையான பொருளை கருமையான பொருளுக்காகத் தனியே வைத்துள்ள பாத்திரத்திலும் சேர்த்து விடுவோம்.

மீண்டும் அவற்றைத் தனித்தனியே வெயிலில் வைத்துக்கட்டியா க்கி முன் போல் கரைத்துத் தெளிவெடுத்துக் காயவைப்போம். இவ்வி தம் 32 தடவை ஷெ பொருள்களை சுத்தி செய்வோம். அப்பால் வெண் மையான தண்ணீர் காய்ந்து கட்டியான பொருளினைக் கரைத்துப் பார்த் தாலும் அதன் அடிப்பாகத்தில் கருமையான பொருள் சிறிதும் தங்கிக்கா ணப்படாது. அவ்வாறே கருமையான பொருள் கட்டியாகியிருப்பதை கரைத்துப் பார்த்தாலும் அதன்மேல் சிறிதும் வெண்மையான பொருள் தண்ணீரில் காணப்பட மாட்டாது. அவற்றைமீண்டும் வெயிலில் வைத்து க்கட்டியாக்குவோம். இவ்விதம் 32 முறை செய்யப்பட்ட சுத்தியினால் இவை முறையே வெண்மையான பொருளாகவும், கருமையான பொரு ளாகவும் மாறிவிட்டன. இனி எவ்வளவு தண்ணீர் விட்டுக் கரைத்தாலும் இவற்றில் கருமையாவது வெண்மையாவது கலந்து காணப்படுவதில்லை. இவற்றை இந்த நிலைமைக்குக் கொண்டு வருவதற்குத்தான் 32 தீக்ஷை என்றும், 32 சுத்தி என்றும் பெயர். இந்த 32 தீக்ஷையும் பெற்ற பிறகே உப்பு "சுத்தம் செய்யப்பட்ட" உப்பாகின்றது.

உப்பைஇவ்விதம் பரிசோதித்துவந்த நமக்கு இப்பொழுது இர ண்டு பொருள்கள் கிடைத்தன. இவ்விரண்டு பொருளையும் சேர்த்தே இதுவரையில் நாம் "சரீரத்தின் தேவை க்குரிய உப்பு" என்ற அபிப்பிரா யத்துடன் உள்ளே அனுப்பி வந்திருக்கிறோம். ஆனால், இந்த இரண்டு பொருள்களில் சரீரத்தின் தேவையை நிறைவேற்றுவது எது என்பதை இனித் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்காக நமது சரீரத்தில் ஒரு தைரியமான செயலைப்புரிந்து பரீக்ஷை செய்வோம்.

ஸதானந்த ஔஷதசாலா.

கோட்டாரக்கரை S. I. R.

கல்ஹார் பஸ்மம்.

தந்தங்களிலுள்ள எவ்வித வியாதிகளையும் இது நிவர்த்தி செய்யும். தந்தங்கள் அசைதல் தந்தவேர்களினின்றும் இரத்தம்வடிதல் தந்தங்களை புழுக்கள்தின்று விடுதல் தந்தங்களின் நிறம்மாறிபாசம்பிடித்தல் முதலிய எல்லா ரோகங்களுக்கும் காட்டாமணக்கின்பாலில் இந்தப்பஸ்மத்திலிருந்து இரண்டுபணவிடை சேர்த்துக்குழைத்து சாதாரணமாய் தந்தசுத்திசெய்வதுபோல் செய்துவந்தால் 16- தினத்திற்குள் நல்லகுணம் சித்திக்கும். அபூர்வமூலிகைகளின்சார்விட்டு அரைத்து அநேகதடவை புடம்போட்டு எடுத்து தயார்செய்து வைத்திருக்கிற இந்தப்பஸ்மம் ஒரு தோலா விலை ரூ. 0—6—0

நேத்திரானந்த பஸ்மம்.

கண்ணில் அகஸ்மாத்தாக வரக்கூடிய காயங்கள், கலக்கங்கள், கண்ரக்தம்போலாகுதல், கண் அழுகுதல் கண்புகைதல் இவ்வியாதிகட்கு பன்னீரிலாவது செவ்விளநீர் ஜலத்திலாவது அரைப்பணவிடைபஸ்மம்சேர்த்து காலை மாலை இரண்டுவேளையிலும் கண்ணில் தாரைபோல் விடவேண்டும். இவ்விதம் மூன்றுநாள்செய்துவர மேற்படி வியாதிகள் முற்றும்தீர்ந்து நல்லசுகந்தரும்.

ஒருதோலா இடைவிலை ரூ. 1—0—9

பிரஹல் தந்தாதி பஸ்மம்.

அநேகவித ஜெந்துக்களின் தந்தங்களையும் அபூர்வமான விலையுயர்ந்த தாதுவர்க்கங்களையும் சேகரித்து அவைகளிலிருந்தும் மிக்க பிரயாசத்துடன் சத்தெடுத்து அவைகளைப்புடநியமப்படிபஸ்மமாக்கி தயார்செய்யப்பட்டிருக்கிறது. கால்பணவிடை பஸ்மம் புராணகிருதத்தில் குழைத்தாவது கோகவின்தேனில் குழைத்தாவது 16—நாள் காலை மாலை இரண்டுவேளையிலும் கண்ணுக்குள்ளில் எழுதிவந்தால் நேத்திரரோகம் 96-ம் அத்தியந்தம் சுகமாய்விடும். கண்ணில்இரத்தமருந்து எழுதுங்காலத்தில் இந்தபஸ்மபத்தை நெய்யில்குழைத்து நாள் ஒன்றுக்கு அரைப்பணவிடை வீதம் 19 நாள்சாப்பிடுவது ரொம்பஅனுகூலமாயிருக்கும். இதை அநேகதடவை கண்ரோகங்களுக்கு பிரயோகித்ததில் திருப்திகரமான அனுபவம் ரோகிகட்கு கிடைக்கப்பெற்றது. புளி, பச்சைமிளகாய், கத்தரிக்காய், கடுகு, இவைகளைத்தள்ளி இச்சாபத்தியமாயிருக்கவும்.

பணவிடை 1-க்கு விலை ரூ. 1—0—0

ஜுரஹரி சஞ்சீவி மாத்திரை.

சுரம் 64 க்கும் கைகண்ட ஔஷதம். ஜுராதிசாரங்களுக்கு சுக்குக்கஷாயத்திலும், சுரமும் மலபந்தமுமிருக்கிறவர்களுக்கு இஞ்சிசுரசத்திலும், கொடுக்கலாம். நாட்பழக்கஞ்சென்றசுரங்களுக்கு காட்டுத்துளசிவேர், சன்னிநாயறு (காட்டுச்சீரகம்)சிறுதிப்பிலி, சிறுதும்பைவேர், கடுக்காய்த்தோடு,கொத்தமல்லிகருக்குமூலம், விஷ்ணுகிராந்தி வகைக்கு கழஞ்சிஒன்றரைவீதம் ஒருபடிதண்ணீரில் கஷாயம்போட்டுமாகாணிப்படிதண்ணீராகவற்றவைத்து அதைமூன்றுபாகமாக்கி ஒவ்வொருபாகத்திலும் இரண்டு குளிகை வீதம் உரைத்து காலைமாலையாக 12-நாள் சாப்பிட்டுவந்தால் மேற்சொன்ன நீடித்தசுரம் முற்றுமில்லாமற் போம். பத்தியம் புளி, கடுகு; தள்ளி சுடுகஞ்சி சாப்பிடவேண்டும்

12—குளிகையின் விலை ரூ. 1—0—0

அர்த்தநாரீச்வர மாத்திரை.

விலையுயர்ந்த பஸ்ம சிந்தூரங்களைச்சேர்த்து மகா சித்தமூலிகைகளின் சார்விட்டு அரைத்து நிர்மிக்கப்பட்டது. மகாஜுரம் சன்னிதோஷம் இவைகளால் மூர்ச்சையடைந்து பிரக்ஞையில்லாமலும், உணர்வில்லாமலும் கிடக்கின்ற வியாதியஸ்தர்களுடைய ஒருமூக்கின் துவாரத்தில் கருநொச்சியிலைச் சாற்றில் ஒருகுளிகையுரைத்து ஆறுசொட்டு நஸியம்செய்ய சரீரத்தின் ஒருபாகம் பூராவும்பிரக்ஞையடைந்துவரும். மற்றமூக்கின் துவாரத்திலும் நஸ்யம் செய்தால் சரீரமுழுவதும் சொரணையுண்டாகி உணர்வுவந்துவிடும். இந்தக்குளிகையை கருநொச்சிச் சாற்றிலாவது சன்னிநாயறுகஷாயத்திலாவது உரைத்து உள்ளுக்குக்கொடுப்பது மிகவும் நலம். இவ்விதம்செய்வதால் எல்லாவிதசன்னி தோஷங்களும் ஜுரதோஷங்களும் பூராச்சாந்தியாய்விடும். பத்தியம் சுடுகஞ்சிசாப்பிடவேண்டும்.

குளிகை 4—க்கு விலை ரூ. 1—0—0

பிரஹத் கஸ்தூரியாதி குளிகை.

முதல்தரம் கஸ்தூரியும் விலையுயர்ந்த பஸ்மம் செந்தூரங்களும் மற்றும் சிரேஷ்டமான திரவியங்களும் சேர்த்து 96 ஔஷதங்களால் நிர்மிக்கப்பட்டது. நாட்பழக்கஞ்சென்ற காசம் ஐந்தும் க்ஷயம்நான்கும், க்ஷயசுரம் நான்கும், அக்கினிமந்தம் ஆறும், சர்த்தி ஐந்தும், கபரோகம்தொண்ணூற்றாறும் மூர்ச்சை நான்கும், அதிசாரம் ஆறும், நெஞ்சுக்குத்து, நெஞ்சுவலி, முதலான இருதயரோகங்கள் ஐந்தும் அனுபான வித்தியாசம்செய்து இந்தக்குளிகையை சாப்பிட்டு வந்தால்முற்றும் நிவாரணமாய்விடும். ஷெ ரோகங்களுக்கு இந்தக்குளிகை அநேகதடவைகொடுத்து கைகண்ட அனுபவமாயிருக்கிறது. சிற்றரத்தை சிறுதிப்பிலி ஆடாதோடைவேர் கண்டங்கத்திரி தூதுவளைவேர் ஒவ்வொன்றும் வகைக்கு இரண்டு கழஞ்சிவீ

ரம் ஒருபடி தண்ணீரில் கஷாயம் போட்டு மாகாணிப்படியாய் வற்றவைத்து அதை மூன்று பாகமாக்கி ஒவ்வொரு பாகத்தில் முதல்தரமான ஒவ்வொரு குளிகை உரைத்துச்சாப்பிடவும். இதுமேற்சொன்ன வியாதிகளுக்குச் சாதாரணமாய்க் கொடுக்கக்கூடிய அனுபானம். இது அனேகவியாதிகளைக் கண்டிக்கக்கூடிய ஔஷதமாயிருப்பதால் எல்லாவியாதிகளுக்கு முள்ள அநுப்பான கிரமங்களும் இவ்விடத்தில் சொல்லவில்லை. வேண்டுவோர் ஔஷதசாலைக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

முதல்தரம் குளிகை 8-க்கு விலை ரூ. 1—0—0

இரண்டாந்தரம் குளிகை 12-க்கு விலை ரூபா 1—0—0

விரேசன அஞ்சனம்.

நேத்திரத்திலுள்ள தூர்மாம்ச வளர்ச்சி கண்ணிமைகள் அழுகுதல் கண்புளித்தல் கண்ணில் தூர்நீர்கட்டுதல், கண்ணில் குத்துவலி உண்டாதல், கண்கலங்குதல் முதலிய எல்லாவித ரோகங்களையும சாந்தி செய்வதில் பிரசித்திபெற்றது. கால் பணவிடை வீதம் எழுநாள் காலை மாலை இரண்டு வேளையுமாக கண்ணில் :எழுதிவந்தால் மேற் சொல்லப்பட்ட வியாதிகள் அத்தியந்தம் சாந்தியாய்விடும்.

ஒருதோலா இடை விலை ரூ. 3—1½—0

தொக்குரோக நிவாரணி.

தோலின்மேலுண்டாகும் புழுக்கடி, விஷக்கடி, அரும்பாரை, பொரிகண்ணி, அழுகண்ணி, ஆனைத்தோலி முதலிய எல்லாவித தோல் சம்பந்தமான மகாரோகங்களுக்கும் இதை பஞ்சினால் தொட்டு தடவத் தீரும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 0—6—0

விர்த்தி நிவாரணி தைலம்.

எல்லாவித அண்ட வாயுக்களையும் மிகவும் சிரேஷ்டமான நிலைமையில் சௌக்கியப்படுத்தும். அதிக நீர் தங்கியிருந்தபோதிலும் மாம்சக்கட்டி வளர்ந்திருந்தாலும் வற்றும்படி செய்யும் கட்டியைக் கலரக்கச்செய்யும். சிறு குழந்தைகளுக்கு ஒரு விதையில் காணும் நீர்தோஷங்களும் முற்றும் நிவிர்த்தியாய்விடும். இதற்கு அனுபானம் வெளுத்த ஆமணக்குவேர்த்தோலி, வெள்ளைப்பூண்டு, அதிமதுரம் கடுக்காய்த்தோடு, நிலவாகை, கழற்சிப்பருப்பு இவை வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் ஒருபடித் தண்ணீரில் கஷாயம்போட்டு அரைக்கால் படியாக வற்றவைத்து அதிலிருந்து மாகாணிப்படி எடுத்து அதில் ஒருடிராம் அல்லது அறுபது சொட்டுவிட்டுக் காலையிலும் அவ்விதம் மாலையிலும் சாப்பிடவும். வாயு பதார்த்தங்களும் கரப்பான் பதார்த்தங்களும் தள்ளி இச்சாபத்தியமாகச் சாப்பிடவும். ஒரு அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 0—1—0

தந்தகிலேச நாசினி.

பல்லுகளிலுண்டாகும் ஈர்க்கட்டு, அரணை, இரத்தம்வடிதல் புழு

தின்னுவதாலுண்டாகும் குத்துவலி இவ்விதமான நோய்களுக்கு ஒரு கைகண்ட சித்த ஔஷதம். குத்துவலி முதலியதுள்ள இடங்களில் பஞ்சினால் இரண்டுசொட்டு வைத்து நோயுள்ள இடத்தில் வைக்கச் சாந்தியாம்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 0—3—0

ஏரழிஞ்சித் தைலம்.

(ஐங்கோலத் தைலம்.)

எல்லாவித விஷங்களையும் நிவாரணஞ் செய்யக்கூடிய ஒரு மகா சித்த ஔஷதம். சர்ப்ப விஷத்துக்கு எருக்கின்பூசாற்றிலும் பேநாய் விஷத்துக்கு மணத்தக்காளிஇலைச் சாற்றிலும், எலிவிஷத்துக்கு கரிப்பான்சாற்றிலும் தேள் விஷத்துக்கு ஈருள்ளிசாற்றிலும் அரணை விஷத்திற்கு நிலவாகையை செம்மறிஆட்டு மூத்திரத்தில் கஷாயம்போட்டு வடிக்கட்டி எடுத்த கஷாயத்திலுமாக முப்பது சொட்டுவீதம்விட்டு அருந்துவதுடன் இந்தத்தைலத்தைக் கடிவாயில் தடவிக்கொள்ளவும் வேண்டியது.

2 டிராம் பாட்டில் 1க்கு விலை ரூ 1—4—0

பீனிச குடாரி தைலம்.

மேற்படி வியாதிகள் உள்ளவர்களுக்கு தலை முழுகுவதற்காக பிரத்தியேகம் தயார்செய்யப்பட்ட பீனிசகுடாரி தைலம்.

இரண்டு அவுன்ஸ் பாட்டிலுக்கு விலை ரூ 0—3—0

கர்ணசூலை நிவாரணி.

காதிரைதல், காதடைப்பு, காதில் பலவிதமான ஓசைகள் முழங்குதல், காதிலிருந்துசீழ்வடிதல், காது துர்நாற்றத்தோடிருத்தல், காதுக்குள் பருக்களுண்டாய் பொட்டிவடிதல், காது மந்தமாகவும், கேட்காமலுமிருத்தல் காது சுருக்கு சுருக்கென குத்துதல், முதலிய கர்ணரோகம் 25க்கும் இந்தத்தைலத்தை கொஞ்சம் சுடவைத்து 2, 3 துளிகள் காதில் விட்டு பஞ்சாலடைத்துக் கொள்ளவேண்டியது. இப்படி 5, 6 தடவை செய்துவந்தால மேற்படி வியாதிகள் யாவும் சொஸ்தமாய்விடும்.

1 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ 0—4—0

முகப்பரு நாசினிக் குழம்பு.

முகத்திலுண்டாகின்ற எல்லாவித பருக்களையும் நிறவித்யாசங்களையும் அத்தியந்தம் சாந்தியாக்குவதில் ஒரு மகா அற்புதமான ஔஷதம். இது நல்லவாசனையோடு கூடியது. இது முகத்திற்கு அழகையும் தேஜஸ்ஸையும் உண்டுபண்ணும். விரலால் கொஞ்சம் தொட்டுத் தடவிவந்தால் மேல் சொல்லப்பட்டவைகள் போவதுமன்றி முகத்திலுள்ள தோலி மெதுவும் பளபளப்புமாகும். பாட்டில் 1க்கு விலை ரூ 0—6—0

குய்யரோக நிவாரணி குழம்பு.

ஸ்திரீ புருஷர்களுடைய குய்யஸ்தானத்திலுண்டாகாநின்ற ரணங்கள் பருக்கள், கொப்புளங்கள், உஷ்ணப்புண்கள், முதலிய எல்லாவித வியாதிகளும் அவைகளாலுண்டாகும் சூடு, குத்தல் முதலிய சங்கடங்களும் இந்தக்குழம்பை கொஞ்சம் கையினுலெடுத்து அந்தஇடங்களில் தடவிவிட்டால் முற்றிலும் சாந்தியாய்விடும். கடுக்காய் சீனக்காரம் புளி இலை இவைகளைத்தண்ணீரில் போட்டுக்காயவைத்து இறக்கிக்கொஞ்சம் ஆறின சலத்தால் சுத்திசெய்துகொள்ளவும்.

பாட்டில் 1க்கு விலை ரூ. 0—6—0

க்ஷயகாச குலாந்தக குளிகை.

நீடித்தகாலம்சென்ற க்ஷயம், காசசுவாசம் (இளைப்பு) விக்கல், கக்கல், இருமல், தடுமன், சிலேட்மத்தாலுண்டான கபக்கட்டு, மூக்கடைப்பு, பீனசம் முதலிய மகாவியாதிகளுக்கு அநேகதடவைகொடுத்து அற்புதமான பலன் கிடைத்துள்ளது.

ஒருமண்டலத்திற்கு சாப்பிடக்கூடிய மாத்திரை ரூ 7—6—0

12க்கு விலை ரூ. 1—0—0

தேள்கடிக்கு மருந்து.

(இதுஓர் அற்புதமான தைலம்.)

தேள் கொட்டப்பட்டவர் அநேகருக்குக் கொடுத்து மகாதிருப்திகரமான அனுபவம் கிடைக்கப்பட்டுள்ளது. எந்த ஜாதித்தேள்கள் கொட்டினபோதிலும் இந்தத்தைலத்தைப் பிரயோகித்த மாத்திரத்தில் உடன் சாந்தி உண்டாய்விடும்.

தைலத்தைப் பிரயோகிக்கும் விதம்.

இருப்புக்கரண்டியின் காம்பை பழுக்கக்காயவைத்து அதில் தைலத்தை இரண்டு சொட்டு விட்டு கடிவாயில் விழும்படி செய்யவும், கடுப்பு தெறி முதலானவைகள் அப்பொழுதே போய்விடும்.

நல்லபாம்பு கடித்தவுடன் பிரயோகித்தால் சாந்தியாகும். எந்தச் சில் விஷங்களுக்கும் இதை உபயோகிக்கலாம். கொட்டிக் கோஞ்சநேரமாய்விட்டால் சொட்டுகள் 4-5- வரை விடவேண்டும்.

60 பேருக்கு உபயோகப்படுத்தக்கூடியது.

2 டிராம் பாட்டில் 1க்கு விலை ரூ 0—8—0

“அகஸ்தியன்.”

இது திருவாங்கூர் கொட்டாரக் கரையிலுள்ள பிரம்மநிஷ்டாமடம் சித்தஸபையின் அத்யக்ஷரான பிரம்மஸ்ரீ ஸதானந்தஸ்வாமிகளால் வெளியிடப்படும் ஓர் மாதாந்த தமிழ் சஞ்சிகையாகும். நமது பார்வைக்கு வந்துள்ள ஜனவரி மாதத்தியசஞ்சிகையில், அகஸ்தியப்பிரபாவம், ஹிந்துமதத்தின் தற்காலநிலைமை, மடாதிபதிகளின் கடமை, தேவத்துவசித்தி, ஆகியவற்றைக் குறித்து சில உத்தமமான வியாசங்கள் வெளியாயிருக்கின்றன. ஓர்ப்ரகிருதி தத்துவ சாஸ்திர பண்டிதர் தமது அனுபவ ஆராய்ச்சியைக்கொண்டு தொடர்ச்சியாக சில குறிப்புகள் எழுத முன் வந்திருப்பதும் பாராட்டத்தக்கது. சர்வ லோகக்ஷேமத்தையும் நாடியுழைக்க முற்பட்டுள்ள இப்பத்திரிகையைப் பலரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். வருடசந்தா ரூபாய் 3-தான்.

சுதேசமித்திரன்.

(2) ....இதில் மரணத்தைத் தடுத்தல் முதலிய பல நல்ல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. 20-11-22.

மலையாளி.

(3) பிரும்மஸ்ரீ ஸதானந்த ஸ்வாமிகளின் ஆதரவில் கொட்டாரக்கரையினின்றும் வெளியாகின்ற அகஸ்தியன் என்னும் தமிழ் மாதாந்தப் பத்திரிகையின் இரண்டிலக்கங்களும் வந்தனத்தோடு வரப்பெற்றோம். இஃது நீடித்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதைக் குறித்து நாம் மிக மகிழ்ச்சியுறுகின்றோம். * * *

கேரளகௌமுதி.

(4) அகஸ்தியன் என்னும் அருமருந்தன்ன சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஆனந்தப்பரவசமாயினேன். இவ்வித அரிய விஷயங்களை அடக்கி இந்நில உலகின் கண் இது பரியந்தம் ஓர்பத்திரிகை உலவியதை யான் கண்டுங்கேட்டுமிலேன். இக்குழவிக்கு ....எம்மையன் (கடவுள்) திருவருள் பாலிப்பாராக! எஸ். காசிப்பிள்ளை. வனபரிபாலன கந்தோர்.

மாத்தளை, இலங்கை.

(5) ....இவைகளில் நல்ல வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.

நவசக்தி. 24-11-22.

(6) அகஸ்தியன் வரப்பெற்று மகிழ்ச்சி எய்தினேன். நல்லதமிழில் நல்ல விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. ஸி. பெருமாள் பிள்ளை.

புரோக்டர், கொழும்பு. 10-12-22.

(7) “இது ‘தீண்டத்தகாதவர்கள்’ என்று ஒதுக்கப்பட்டவர்களின் குறைகளையும் தீண்டாமையையும் விலக்கி அவர்களை ஹிந்துமத சம்ஸ்காரங்களால் மேலான நிலைமைக்குக் கொண்டுவருதல் முதலியவைகளைப் பீடிகையாகக்கொண்டு அகஸ்தியாச்ரமத்திலிருந்து இனிய செந்தமிழ் நடை-

யில் எழுதப்பட்டு வெளியாகும் மாதாந்திரப்பத்திரிகை.

ஸ்ரீலங்கா.

(8) இதில் பல பிரகிருதி தத்வ விஷயங்களும், இன்னும் சூக்ஷ்ம அறிவுக்குச் சாதமான பலவிஷயங்களும் எடுத்தாளப்படுகின்றன. இது போலவே மலையாள பாஷையிலும் (வெளியிட்டு) அது கைகூடினல் தெலுங்கிலும், பிறகு கன்னடத்திலும், பிறகு வடநாட்டுக்குப் பிரயோஜனமாக அவ்வப்பாஷைகளிலும் மாதப் பத்திரிகைகள் ஆரம்பிக்கும் யோஜனையிருக்கிறதென்று பத்திராசிரியர் குறிக்கின்றார்.

தனவைசியஊழியன்.

(9) அகஸ்தியன் ....எல்லாவிதமான நன்மைகளும் பெறுமாறு வேண்டுகிறோம். * * * *

கேரளதீபம்.

(10) அகத்தே ஆன்மாவுக்கு வேண்டிய உபதேசங்களையும் புறத்தே வைத்தியம் மற்றும் சாஸ்திர இதிகாசங்களைப்பற்றியும் கூறிவருகின்றது.

தமிழ்நாடு. 3-12-22.

(11) ....விஷயங்கள் நிரம்பப்பெற்றிருப்பதுடன் வைத்திய சாஸ்திரங்களின் மேலான முறைகளும் வெளியாகின்றன. உலகத்திற்கே அற்பணஞ்செய்யப்பட்ட இப்பத்திரிகையை யாவரும் ஆதரிக்க வேண்டியது அவசியமாகும். * * *

நியாயாபிமானி. 20-12-22.

(12) இதில் பல விஷயங்களும் வெளியாகின்றன. உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் லௌகிக விஷயங்களும் வைதிக விஷயங்களும் இன்றியமையாதவையாதலால் ஸ்ரீ ஸதானந்த ஸ்வாமிகள் இப்பத்திரிகையை உலகிற்கு அர்ப்பணஞ்செய்திருக்கின்றனர். இப்பத்திரிகையில் பல அரிய வைத்திய முறைகளும் வெளியாகின்றன. .... தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் இதனை ஆதரித்தல் வேண்டும்.

விசுவகர்மன் தொழில்.

(13) "'அகஸ்தியன்' மூன்றாவது இலக்கம் இன்று வந்தது. ....வாசித்து மிகவும் ஆனந்தித்தேன். இப்பத்திரிகையினாலும் தாங்கள் உலகத்திற்குச்செய்யும் நன்மை மேன்மேலும் ஓங்கிவருவதாக!"

எஸ். இரத்நசுவாமி. புரோக்டர், கொழும்பு.

(14) தமிழ் பாஷையில் வெளியாகின்ற பத்திரிகைகளில் ஒன்றாகிய அகஸ்தியனில் உபயோகமான பல விஷயங்கள் வெளியிடப்படுகின்றனமையால், பற்பல விஷயங்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புவோர்களால் இது வரவழைத்துக் கொள்ளத்தக்கது.

மஞ்சுபாஷிணி.

(15) அகஸ்தியன ....வரப்பெற்றோம். ஸ்ரீஸ்வாமிகளின் சிறந்த அபிப்பிராயங்களை ஜனசமூகத்தில் பரவச்செய்வதே இதன் உத்தேசமென அறிகின்றோம். மதசம்பந்தமான விஷயங்கள் இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நடை அவ்விஷயங்களின் பெருமையை அதிகப்படுத்துகின்றது. இதற்கு சகலவிதமான நன்மைகளும் உண்டாவதாக!

9-1-93. அரயன்.

(16) இது, தன் பெயருக்கேற்ப, அகஸ்தியர் உபதேசத்தைப் போன்ற பல அரிய அறிவுரை வியாசங்களைக் கொண்டு வெளி வருகின்றது. தமிழ் நாட்டிற்குப் பெரிதும் பயன் படுவது. தமிழ் மக்கள் எல்லோரும் இதினை ஆதரிப்பார்களாயின் நம்நாட்டிற்குக் கலாஞானவளர்ச்சி விருத்தியாகும். * * * *

தருமசீலன்.

(17) இந்து மத ஏற்றத்தையே பிரதானமாகக் கொண்டுழைத்து வருகிறதாயினும், வைத்திய, முறைகளையும், கைத்தொழில் குறிப்புகளையும், ஞானார்த்தமானதும் ஆத்மார்த்தமானதுமான விஷயங்களையும் தனது அங்கத்தில்கூடி வெளிவருகின்றது. இது நல்லபிவிருத்தியடைய வேண்டுகிறோம். * * * *

நாடார்குல மித்திரன்.

சந்தான ரத்தினத்தைப்பற்றிப் பத்திரிகைகள் என்ன சொல்லுகின்றன?

பிரபஞ்ச முற்போக்குக்கும், உலகக்ஷேம லாபத்திற்கும் முக்கிய காரணமாயுள்ளது சந்தான விருத்தியே! நாளடைவில் பல காரணங்களால் இவ்விருத்தி க்ஷீணகதி அடைந்துவரும் இக்காலத்திற்குத் தக்கதாக மலையாள பாஷையில் பிரும்மஸ்ரீ ஸதானந்த ஸ்வாமிகளால் வெளிப்படுத்தப்படும் பலநூல்களில் இச் சந்தான ரத்தினமும் ஒன்றாகும். இதில் சந்தானோற்பத்தி யாகாமலிருப்பதன் காரணங்கள், மலடு ரோகங்களின் விபரங்கள், கர்ப்போற்பத்திக்குத் தடையான வியாதிகள், அவைகளை நீக்கும் வழிகள், நற்குழந்தைகளையடையும் வழிகள், மந்திர யந்திர தந்திர ஔஷதப்பிரயோகங்களைக்கொண்டு சந்தான விருத்தியடையும் பலவேறு வழிகள், சரீரே, நாடிகள் இயற்கை சித்திகளின் வனப்பு, தத்துவங்கள், ஜீவ அதிர்ஷ்ட காரணங்கள், ஜனன ரகசியங்கள், விவாகஞ்செய்யத்தகாத இடங்கள், குழந்தைகளை வளர்ப்பதற்கான பல விஷயங்கள், ஸ்திரீகளின் கடமைகள் முதலியன விரிவாயும் தக்க மேற்கோள்களுடனும் பிரும்மஸ்ரீ டி. கே. ராமபத்திர சர்மா அவர்களால் தமிழில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தப்பட்டது. இதனால் கிடைக்கும் ஊதியத்தை மேற்படி ஸ்வாமிகளின் தர்மஸ்தாபனங்களுக்கே செலவிடப்படுவதாம். விலை ரூ. 1-0-0 இதற்கு நாம் கொடுக்கும் விலை விஷயத்துடன் ஒத்திடின் நூற்றிலொரு பாகமாகா.